Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 14

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

8 ரஜப் 1438 ஹிஜ்ரி கமரி 6 ஷஹாதத் 1396 ஹிஜ்ரி ஷம்ஸீ

6 ஏப்ரல் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**பெரியோர்களாக இருந்து சிறியவர்கள் மீது கருணை காட்டுங்கள். அவர்களை அற்பமாகக் கருதாதீர்கள். நீங்கள் அறிவாளியாக இருந்து அறிவீனர்களுக்கு அறிவுரை கூறுங்கள். தற்பெருமையால் அவர்களை அவமானப்படுத்தாதீர்கள். நீங்கள் செல்வந்தர்களாக இருந்து ஏழை எளியவர்களுக்கு உதவி புரியுங்கள். தன்னலத்தால் அவர்கள் மீது அகங்காரம் கொள்ளாதீர்கள். நாசத்தை விளைவிக்கக்கூடிய வழிகளைக் கண்டு பயப்படுங்கள். இறைவனுக்கு எப்போதும் அஞ்சிக் கொண்டிருங்கள். இறையச்சத்தின்படி செயல்படுங்கள்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

பெரியோர்களாக இருந்து சிறியவர்கள் மீது கருணை காட்டுங்கள். அவர்களை அற்பமாகக் கருதாதீர்கள். நீங்கள் அறிவாளியாக இருந்து அறிவீனர்களுக்கு அறிவுரை கூறுங்கள். தற்பெருமையால் அவர்களை அவமானப்படுத்தாதீர்கள். நீங்கள் செல்வந்தர்களாக இருந்து ஏழை எளியவர்களுக்கு உதவி புரியுங்கள். தன்னலத்தால் அவர்கள் மீது அகங்காரம் கொள்ளாதீர்கள். நாசத்தை விளைவிக்ககூடிய வழிகளைக் கண்டு பயப்படுங்கள். இறைவனுக்கு எப்போதும் அஞ்சிக் கொண்டிருங்கள். இறையச்சத்தின்படி செயல்படுங்கள். படைப்பினங்களை ஒருபோதும் வணங்காதீர்கள். உங்கள் எஜமானனாகிய இறைவன் பக்கமே உங்களை தொடர்புபடுத்திக் கொள்ளுங்கள். உலகத்துடன் உள்ளத்தை ஒன்றச் செய்யாமல் இருந்து வாருங்கள். நீங்கள் அவனுக்காகவே ஆகி விடுங்கள். மேலும், அவனுக்காகவே உயிர் வாழுங்கள். அவ்விறைவனுக்காகவே எல்லாவிதமான அசுத்தங்களையும் பாவங்களையும் வெறுத்து விடுங்கள். ஏனெனில், அவன் பரிசுத்தமானவனாயிருக்கின்றான். நீங்கள் இறையச்சத்துடன் இரவைக் கழித்ததாக ஒவ்வொரு காலைப்பொழுதும் உங்களுக்காக சாட்சி கூற வேண்டும். மேலும் நீங்கள் பகற்பொழுதையெல்லாம் இறையச்சத்துடன் கழித்ததாக ஒவ்வொரு மாலைப்பொழுதும் உங்களுக்காக சாட்சி கூற வேண்டும். உலகத்தின் சாபங்களுக்காக நீங்கள் பயப்பட வேண்டாம். ஏனெனில், அவை புகை மண்டலம் மறைவதைப்போல் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மறைந்து விடும். மேலும், அவை பகலை இரவாக்க முடியாது. இதற்கு மாறாக வானத்திலிருந்து இறங்கக்கூடிய சாபத்திற்கே நீங்கள் அஞ்சிக் கொண்டிருங்கள். ஏனெனில், இந்த சாபம் எவர் மீது விழுமோ அவரை அது இம்மை, மறுமை ஆகிய இரு உலகிலும் நாசமாக்கி விடும். நீங்கள் வெளிவேஷத்துடன் உங்களை காப்பாற்றிக் கொள்ள முடியாது. ஏனெனில் உங்களைப் படைத்த அந்த இறைவனின் பார்வையோ மனிதனுள் ஊடுருவிச் செல்லக்கூடியதாயிருக்கிறது. ஆகவே, இத்தகைய இறைவனை உங்களால் ஏமாற்ற முடியுமா ? ஆகவே, நீங்கள் நேர்மையாளர்களாக ஆகி விடுங்கள்; உறுதியானவர்களாக ஆகி விடுங்கள். உங்களிடையே மிகச் சிறிய அளவில் இருள் காணப்பட்டாலும் அது உங்களின் முழு ஒளியையும் அகற்றி விடும். எந்நிலையிலும், எவ்வகையிலும் உங்களிடம் அகங்காரமோ, வெளி வேஷமோ, சுயநலமோ, சோம்பலோ காணப்பட்டாலும் நீங்கள் சிறிதும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு தகுதி அற்றவர்களாகி விடுவீர்கள்.

*(கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயீன் தொகுதி 19 பக்கம் 12)*

*(குத்பா தொடர்ச்சி...)*

நடுநிலைப்பள்ளி படிப்பை படித்து முடித்து விட்டு ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்தார்கள். 1955 –ல் மவ்லவி ஃபாஸிலுக்கான தேர்வில் தேர்ச்சி பெற்றார்கள். 1957 –ல் எஃப்.ஏ படித்து முடித்தார்கள். 1958 ல் ஷாஹித் படித்து முடித்தார்கள். 1959 –ல் பி.ஏ தேர்வில் வெற்றி பெற்றார்கள். 1958 –ல் அவர்கள் முதலாவதாக பிரச்சாரகராக நியமிக்கப்பட்டார்கள். பிப்ரவரி 1960 முதல் ஏப்ரல் 1963 வரை அமெரிக்காவில் முபல்லிக்காக பணியாற்றினார்கள். 1966 –க்குப் பிறகு சிறிது காலம் வரை தற்காலிகமாக அமானத் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தார்கள். 1969 – 1971 வரை லைபேரியாவில் ஜமாஅத்திற்கு தொண்டு செய்யும் நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது. இவர்கள் முதலாவதாக 1960 –ல் அமெரிக்காவில் பணியமர்த்தப்பட்டார்கள். மிகவும் எழுச்சியாக செயல்படக்கூடிய முபல்லிக்காக இருந்தார்கள். ரேடியோ மூலமாகவும், பத்திரிகை மூலமாகவும் தப்லீக் செய்வதற்கான சந்தர்ப்பம் இவர்களுக்கு கிடைத்து வந்தது. லைபீரியாவில் இவர்கள் தொண்டு புரிந்து வந்த காலத்தில் லைபீரியாவின் அதிபரான டப்மேன் இவர்களை அவர் நடத்தி வந்த மாதாந்திர கூட்டத்திற்கு அழைப்பார்கள். இவர்களை துஆ செய்ய வைப்பார்கள்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் லைபீரியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது அதிபர் டோன் மேன் அவர்கள் ஹுஸூர் அவர்களை கண்ணியப்படுத்தும் வகையில் அவர்களை விருந்திற்கு அழைத்தார்கள். மேலும் இவர்களைப் பற்றி He is very Forcefull அதாவது இவர்கள் மிகவும் வேகமாக செயல்படக்கூடியவர்கள் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் He is very Forcefull Without choosing any force அதாவது இவர்கள் எந்த படையையும் பயன்படுத்தாமலேயே வேகமாக செயல்படக் கூடியவர்கள் என்று கூறினார்கள்.

அமீனுல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் 1977 வரை இங்கிலாந்திலும் பணியமர்த்தப்பட்டார்கள். பிறகு இவர்கள் உடல் நலக்குறைவின் காரணமாக ஓய்வு பெற்றார்கள். இவர்களது திருமணம் இக்பால் ஷா சாஹிபின் மகளான புஷ்ரா ஷா சாஹிபா அவர்களுடன் நடைபெற்றது. இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சஹாபியான டாக்டர் விலாயத் ஷா சாஹிப் அவர்களின் பேத்தி ஆவார்கள். இவர்கள் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மனைவியான ஆப்பா தாஹிரா சித்தீகா சாஹிபா அவர்களின் மூத்த சகோதரர் ஆவார்கள். இவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர்.

அல்லாஹ் மர்ஹூம் அவர்களை தனது கருணையில் மூழ்கச் செய்வானாக. இந்த அனைவரது பாவங்களையும் மன்னித்து இவர்கள் அனைவருடனும் கருணையுடன் நடந்து கொள்வானாக. இவர்களது தகுதிகளை உயர்த்துவானாக. நான் ஏற்கனவே கூறியது போன்றே தொழுகைகளுக்குப் பிறகு இவர்களுக்காக நான் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இளைஞர்கள் மற்றும் பெண்களின் திருமண விவகாரங்கள், திருமணம் முடிந்த பிறகு ஏற்படுகின்ற குடும்பப் பிரச்சனைகள் ஆகியவை எத்தகைய விவகாரங்களாக இருக்கின்றதென்றால் அது குடும்பங்களின் நிம்மதியின்மை மற்றும் கவலைக்கு காரணமாக இருக்கின்றது. திருமணம் முடிந்த பிறகு குடும்பப் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அவை கணவன் மனைவிக்கு மட்டும் பிரச்சனைக்குரியவையாக இருப்பதில்லை. மாறாக, இரு தரப்பிலுமுள்ள பெற்றோர்களின் கவலைக்கும் காரணமாக இருக்கின்றது. இது மட்டுமல்ல, மாறாக அவர்களுக்கு குழந்தைகள் இருந்தால் அது குழந்தைகளிடமும் அமைதியின்மையை ஏற்படுத்துகின்றது. சில நேரங்களில் சந்ததிகள் இதன் காரணமாக மார்க்க அளவிலும் உலக அளவிலும் சீர்குலைந்து விடுகின்றனர். தாய் தந்தையருக்கும், குடும்பத்தினருக்கும் மேலும் கவலைகளை உருவாக்குகின்றனர். இவ்வகையில் கவலைகளின் ஒரு தொடர் ஆரம்பமாகி விடுகின்றது.

திருமண வரன் பார்ப்பது தொடர்பான விவகாரங்கள் மற்றும் திருமணம் முடிந்த பிறகு ஏற்படுகின்ற பல்வேறு குடும்ப பிரச்சனைகள் ஆகியவற்றிற்கான காரணங்களை அடையாளங் காட்டியவாறு அவற்றை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் அவற்றிற்கான சிகிச்சைக்காக மார்க்கப் போதனைகள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகள் ஆகியவற்றைச் சான்று காட்டி ஜமாஅத் சகோதரர்களுக்கு ஹுஸூர் அவர்கள் வழங்கியுள்ள வழிகாட்டல்கள்.

பல்வேறு வயதில் ஏற்படுகின்ற இந்த குடும்பப் பிரச்சனைகளுக்கான காரணத்தை ஒரு சொல்லில் சொல்வதாக இருந்தால் அதற்கான காரணம் அவர்கள் மார்க்கத்தை விட்டு விலகிச் சென்றிருப்பதாகும். மேலும் அவர்கள் மார்க்கப் போதனைளை அறியாமல் இருப்பதாகும். அதில் அவர்களுக்கு ஆர்வம் இல்லாமல் இருப்பதாகும். உலகியல் விஷயங்களிலும் உலகப் பொருள்களிலும் அவர்களுக்கு விருப்பம் இருக்கின்றது. எனவே இந்த விஷயங்களுக்கான தீர்வை நாம் தேட வேண்டும் என்றால் அதனை மார்க்க போதனைகளின் அடிப்படையில் தேட வேண்டும்.

ஒருபுறம் நம்மை நாமே அஹ்மதிகள் என்று கூறுகின்றோம். நாங்கள் உலகை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குபவர்கள் ஆவோம் என்று வாதம் செய்கின்றோம். பிறகு மார்க்கப் போதனைகளின் அடிப்படையில் தான் இதற்கான தீர்வை நாம் தேட வேண்டும். அவை திருக்குர்ஆனிலும், நபிமொழிகளிலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கியுள்ள போதனைகளிலும் நமக்கு கிடைக்கும்.

மதிப்பிற்குரிய ஹுதா பக்ஷ் முஃமின் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய முஹம்மது நவாஸ் முஃமின் சாஹிப் அவர்களும் மதிப்பிற்குரிய டாக்டர் ஸஃபிருத்தீன் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய செய்யது ரஃபீக் அஹ்மது ஸஃபீர் சாஹிப் அவர்களும் வஃபாத் ஆகி விட்டனர். இருவருக்கும் ஜனாஸா ஹாஸிர் தொழுகை நிறைவேற்றப்பட்டது. மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதா மிர்ஸா ஹஃபீஸ் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய டாக்டர் மிர்ஸா லயீக் அஹ்மது சாஹிப் அவர்களும் விரோவாலைச் சார்ந்த மதிப்பிற்குரிய அப்துல் மஜீத் கான் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய அமீனுல்லாஹ் கான் சாலிக் சாஹிப் அவர்களும் வஃபாத் ஆகி விட்டனர். இந்த இருவருக்காகவும் ஜனாஸா காயிப் தொழுகை நிறைவேற்றப்பட்டது. மர்ஹூம்களின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டன.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 3 மார்ச் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **அமான்** மாதம் **3 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

இளைஞர்கள் மற்றும் பெண்களின் திருமண விவகாரங்கள், திருமணம் முடிந்த பிறகு ஏற்படுகின்ற குடும்பப் பிரச்சனைகள் ஆகியவை எத்தகைய விவகாரங்களாக இருக்கின்றனவென்றால் அது குடும்பங்களின் நிம்மதியின்மை மற்றும் கவலைக்கு காரணமாக இருக்கின்றது. திருமணம் முடிந்த பிறகு குடும்பப் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அவை கணவன் மனைவிக்கு மட்டும் பிரச்சனைக்குரியதாக இருப்பதில்லை. மாறாக, இரு தரப்பிலுமுள்ள பெற்றோர்களின் கவலைக்கும் காரணமாக இருக்கின்றது. இது மட்டுமல்ல, மாறாக அவர்களுக்கு குழந்தைகள் இருந்தால் அது குழந்தைகளிடமும் அமைதியின்மையை ஏற்படுத்துகின்றது. சில நேரங்களில் சந்ததிகள் இதன் காரணமாக மார்க்க அளவிலும் உலக அளவிலும் சீர்குலைந்து விடுகின்றனர். தாய் தந்தையருக்கும், குடும்பத்தினருக்கும் மேலும் கவலைகளை உருவாக்குகின்றனர். இவ்வகையில் கவலைகளின் ஒரு தொடர் ஆரம்பமாகி விடுகின்றது. ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் எனக்கு வரும் கடிதங்களில் இத்தகைய விவகாரங்கள் வருகின்றன. அல்லது சந்திப்புகளின் போது மக்கள் தங்களது பிரச்சனைகளை எனக்கு கூறுகின்றனர்.

ஒரு பக்கம் பெண்களுக்கு வரன் கிடைப்பது தொடர்பான பிரச்சனை இருக்கின்றது. படிப்பை காரணமாக கூறி சரியான வயதில் திருமணம் செய்வதில்லை. பெண்ணுக்கு திருமண வயது வந்த பிறகும் இப்போது அவள் படிக்கின்றாள் என்று கூறுகின்றனர். சிறிது வயது கழிந்த பிறகு திருமணம் நடக்கும் போது ஒருவர் மற்றவரை புரிந்து கொள்ளாத நிலை இருக்கின்றது என்பதை காரணமாக கூறி அவர்களது தொடர்பில் விரிசல் ஏற்பட்டு விடுகின்றது. இடைவெளி ஏற்படுகின்றது. சில பெண்களிடமிருந்து இந்த விஷயமும் தெரிய வருகின்றது. அந்த பெண்களது தோழிகளும், உடன் இருப்பவர்களும் எத்தகைய எண்ணங்களை அவர்களது உள்ளங்களில் ஏற்படுத்தி விடுகின்றனர் என்றால் இந்த நாடுகளில் உங்களுக்கு கிடைக்க வேண்டிய பல பெரிய உரிமைகள் உள்ளன. இவற்றை உங்களுடைய கணவனிடம் கூறுங்கள். எனக்கு இந்த இந்த உரிமைகளை செலுத்துங்கள். இதையெல்லாம் தாருங்கள் என்று கணவரிடம் கூறுங்கள். அது அல்லாமல் நான் உங்களை எனது கணவனாக ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று கூறுங்கள் என்றெல்லாம் அவளிடம் கூறுகின்றனர். மேலும் கணவர் கூறுகின்ற ஒவ்வொரு விஷயத்தையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றும் அந்தப் பெண்ணிடம் கூறுகின்றனர்.

பிறகு சில நேரங்களில் தாய் தந்தையர் சுயமே தமது பெண் பிள்ளைகளுக்கு எத்தைகய விஷயங்களைக் கற்பிக்கின்றனர் என்றால் அதன் காரணமாக ஆண், பெண் அல்லது கணவன் மனைவிக்கு இடையிலுள்ள நம்பிக்கை இல்லாமல் ஆகிவிடுகின்றது. அல்லது அவர்களிடையே சந்தேகங்கள் உருவாகின்றன. வேதனையான விஷயம் என்னவென்றால் பாகிஸ்தானிலிருந்து இங்குள்ளவர்களை திருமணம் செய்து இந்த நாட்டிற்கு வரக்கூடிய பெண்கள் இங்கு சுதந்திரமான சூழலைப் பார்த்து அதன் தாக்கத்திற்கு ஆளாகி அதன் காரணமாக தவறாக கோரிக்கைகளை வைக்க ஆரம்பித்து விடுகின்றனர். சில நேரங்களில் அவர்களது வாழ்க்கை ஆரம்பமாவதற்கு முன்னதாகவே இங்கு அவர்கள் வந்ததுமே அவர்களுக்கிடையிலுள்ள உறவை முறித்துக் கொள்கின்றனர். இது பெண் பிள்ளைகளுடைய நிலை மட்டுமல்ல. மாறாக, இளைஞர்களும் இதையே செய்கின்றனர். பெண்களை விட இத்தகைய செயல்களை செய்வதில் ஆண்கள் அதிகமாக ஈடுபடுகின்றனர். இதற்கு காரணம் பெரும்பாலான இளைஞர்களும் பெண் பிள்ளைகளும் கவ்லே ஸதீது அதாவது நேரிய கூற்றை கூறாமல் இருக்கின்றனர். இதற்கு திருமண உறவுகளுடன் குறிப்பாக தொடர்பு இருக்கின்றது. நேரிய கூற்றை கூறுவது தொடர்பாக நிக்காஹ்வின் போது ஓதப்படுகின்ற வசனங்களில் குறிப்பாக வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

அதாவது பரஸ்பரம் ஒருவர் மற்றொருவரிடம் தங்களது முழுமையான நிலைமைகளை தெரிவிப்ப –தில்லை. பிறகு சில நேரங்களில் தாய் தந்தையர் பெண் பிள்ளைகளை நிர்பந்தப்படுத்தி திருமணம் செய்து வைக்கின்றனர். பிறகு சரியாகி விடும் என்கின்றனர். கல்வி மற்றும் வாழ்க்கைமுறை ஆகியவற்றின் தரத்திலுள்ள வேறுபாட்டின் காரணமாக அவர்களுக்கிடையே உறவு ஒத்துப் போவதில்லை. இது போன்று சில இளைஞர்கள் வேறு எங்காவது ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றனர். ஆனால் பெற்றோர்கள் கூறுவதற்கு அவர்கள் மறுப்பு தெரிவிக்காமல் இருந்து விடுகின்றனர். இவர்கள் பாகிஸ்தானில் திருமணம் செய்கின்றனர். அல்லது இங்குள்ள தங்களது உறவினர்களின் குடும்பத்தில் தங்களது விருப்பத்திற்கேற்ப திருமணம் செய்கின்றனர். சிறிது காலம் கழிந்த பிறகு அந்த அப்பாவி பெண்கள் மீது அநீதியிழைக்க ஆரம்பித்து விடுகின்றனர். முதலில் அந்த பெண்ணின் கணவர் தரப்பிலிருந்து அநீதி இழைக்கப்படுகின்றது. பிறகு எந்த மாமனார் குடும்பத்தினர் அல்லது மாமியார் அந்த பெண்ணை மிகவும் விருப்பத்துடன் தங்களது வீட்டிற்கு அழைத்து

வந்தனரோ அவர்கள் தரப்பிலிருந்து அநீதியிழைக்கப் –படுகின்றது. பிறகு மற்ற உறவினர்கள் தரப்பில் இருந்தும் அநீதியிழைக்கப்படுகின்றது.

எந்நிலையிலும் இளைஞர்களாக இருந்தாலும் சரி; பெண்களாக இருந்தாலும் சரி. ஒரு தரப்பைச் சார்ந்த மாமனார் வீடாக இருந்தாலும் சரி; அல்லது மற்ற தரப்பிலுள்ள மாமனார் வீடாக இருந்தாலும் சரி. அவர்களில் எவர் மீதும் நூறு சதவிகிதம் நாம் எந்த குற்றத்தையும் சுமத்த முடியாது. இந்த அனைத்து விஷயங்களுக்கும் முழுமையாக அவர்களையே நாம் குற்றவாளிகளாக ஆக்க முடியாது. சில நேரங்களில் இவ்விஷயத்தில் இளைஞர்கள் தவறிழைத்தவர்களாக இருக்கின்றனர். சில நிலைமைகளில் பெண் பிள்ளைகள் தவறிழைத்தவர்களாக இருக்கின்றனர். பிறகு நான் ஏற்கனவே கூறியது போன்று குடும்பப் பிரச்சனைகள் குழந்தைகளிடமும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பல குழந்தைகள் பிறந்த பிறகு நல்ல முறையில் வாழ்க்கை ஒரு நீண்ட காலம் கழிந்த பிறகு திடீரென்று அந்த ஆணின் மூளையில் ஒரு கிருமி நுழைந்து விடுகின்றது. அப்போது அவர் எனது மனைவியுடன் இனி நான் வாழ முடியாது என்று கூறுகின்றார். எனவே நான் இரண்டாவது திருமணம் செய்யப் போகின்றேன் என்று கூறுகின்றார். அல்லது அந்த மனைவியைப் பார்த்து உன்னை நான் தலாக் கொடுக்கப் போகின்றேன் என்று கூறுகின்றார். அல்லது ஒரு நீண்ட காலம் கழிந்த பிறகு இந்த நபருடன் நான் எனது வாழ்க்கையை மிகவும் துன்பத்தில் கழித்தேன் என்று மனைவி கூறுகின்றார். இனி என்னால் சகித்துக் கொள்ள முடியாது என்கிறார். எனவே நான் குலா வாங்கப் போகின்றேன் என்று கூறுகின்றார்.

இங்கு நான் இதையும் கூறிக் கொள்கின்றேன். ஜமாஅத்தில் தலாக்குகளை விட குலா பெறுவது அதிகமாக இருக்கின்றது. குலாவிற்கான விண்ணப்பங்கள் கஸா துறையில் அதிகமாக வருகின்றன. எந்நிலையிலும் இத்தகைய நிலைமைகளில் குழந்தைகள் பாதிக்கப் –படுகின்றனர். விவரம் தெரிந்தவர்களுக்கு உலகத் துறைகளில் கூட இந்த விஷயம் நிரூபிக்கப்பப்பட்டிக் –கின்றது என்பது தெரியும். அதாவது பெற்றோர்களை விட்டுப் பிரிந்த பிறகு எவர்களிடம் குழந்தை இருந்தாலும் அந்த குழந்தைகள் மனரீதியாகவும், ஒழுக்கரீதியாகவும், ஏனைய தகுதிகளின் அடிப்படை –யிலும் பாதிப்பிற்கு ஆளாகின்றனர். எந்நிலையிலும் இந்த வேதனை நிறைந்த நிலைமைகளுக்கு எவர் பொறுப்பாளியாக இருந்தாலும் அது இளைஞர்களாக இருந்தாலும் சரியே. இளைஞர்கள் பெண்கள் மீது குற்றம் சுமத்துகின்றனர். அதாவது மேற்கத்திய சூழலிற்கேற்ப பெண்கள் தங்களை உருவாக்கி கொண்டதனால் அவர்கள் எங்களது கவலைக்கு காரணமாக ஆகி விடுகின்றனர். எங்களோடுள்ள உறவை அவர்கள் பேணுவதில்லை அல்லது ஆரம்பத்தில் நாங்கள் சில காரணங்களால் எங்களது பெற்றோர் –களுடன் இருக்க விரும்பினோம். அந்நிலையில் மணமுடித்து வந்த பெண் எங்களோடு இருக்க விரும்பவில்லை. அல்லது இந்த பெண்ணிற்கு மார்க்க அறிவே இல்லை என்று இளைஞர்கள் கூறுகின்றனர். அல்லது இந்த இளைஞர்களிடம் தவறான எதிர்பார்ப்புகள் வைக்கப்படுகின்றன. உதாரணமாக, உடனடியாக புதிய வீட்டை வாங்க வேண்டும். அந்த வீடு உங்களது சொத்தாக இருக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன.

பிறகு கணவன், மனைவிக்கிடையேயுள்ள விவகாரங்களில் கணவரது பெற்றோர்களின் தலையீடும் இருக்கின்றது. பிறகு ஒருவர் மற்றவரிடம் சரியான முறையில் தங்களது நிலைமைகளை தெரிவிக்காததன் காரணமாகவும், நேரிய கூற்றை கூறாமல் இருந்ததன் காரணமாகவும் புகார்கள் எழுகின்றன. நான் முதலில் கூறியது போன்றே நேரிய கூற்றை கூறுவதை கடைபிடிக்காமல் விட்டு விடுகிறார்கள். இது மிகவும் அவசியமான ஒன்றாகும். அவ்வாறே பெண்களின் உள்ளத்தில் இளைஞர்களின் வீட்டிலுள்ளவர்கள் தொடர்பாக சில விஷயங்கள் உள்ளது. அதாவது அந்த இளைஞர்களின் தாய் தந்தையர் அந்த பெண்ணின் முன்னால் எப்போதும் அந்த பையனைப் பற்றியே புகழ்ந்து கூறிக் கொண்டிருப்பார்கள். அதாவது எங்களது மகன் இப்படிப்பட்டவன். அப்படிப்பட்டவன் என்று கூறிக் கொண்டிருப்பார்கள். இதன் மூலம் ஏதாவதொரு சாக்கில் அந்த பெண்ணை அந்த பையனை விட குறைவாக மதிப்பிடும் வகையில் அவர்கள் பேசுகின்றனர். உதாரணமாக, அவள் குள்ளமாக இருக்கின்றாள். அல்லது தடித்து இருக்கின்றாள். நிறம் சிவப்பாக இல்லை போன்ற பல விஷயங்களைக் கூறுகின்றனர். பெண் ஏதாவதொரு காரணத்தால் வேலை செய்து வந்தால் அதை வைத்து அவளை குத்திக் காட்டி பேசுகின்றனர்.

பிறகு கணவன் மனைவிக்கு இடையிலுள்ள தொடர்புகளிலும் கூட மாப்பிள்ளை வீட்டாரின் தலையீடு இருக்கின்றது. பெண் வீட்டின் தரப்பில் இருந்தும் பையன் திருமணம் நடந்த பிறகு நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளை நிறைவேற்றவில்லை என்று கூறப்படுகின்றது. அவரிடம் பொறுப்புணர்வு இல்லை என்கின்றனர். பையன்கள் பொதுவாக இங்குள்ள சுற்றுச் சூழலில் வளர்ந்து அவர்களுக்கு 25 அல்லது 26 வயது ஆன பிறகும் கூட நான் இப்போது சிறியவனாகத்தான் இருக்கின்றேன். இப்போது எனக்கு திருமணத்திற்கான வயது வரவில்லை என்று கூறுகின்றனர். இங்குள்ள சுற்றுச்சூழலின் தாக்கத்தின் காரணமாக இங்குள்ள அஹ்மதி இளைஞர்களும் ஆசியா கண்டத்தைச் சார்ந்த இளைஞர்களும் நாங்கள் இப்போது சிறியவர்களாக இருக்கின்றோம் என்று கூறுகின்ற நோய்க்கு ஆளாகி இருக்கின்றனர். எங்களால் இப்போது பொறுப்பை நிறைவேற்ற முடியாது என்று கூறுகின்றனர். நீங்கள் சிறியவர்களாக இருந்து பொறுப்புகளை நிறைவேற்ற முடியவில்லை என்றால் பிறகு நீங்கள் திருமணம் செய்ய வேண்டிய தேவை என்ன வந்து விட்டது?

எந்நிலையிலும் புகார்களின் இந்த தொடர் இருந்து வருகின்றது. இரு தரப்பிலிருந்தும் தொடர்ந்து இருந்து வருகின்றது. இவ்வாறே திருமணமாகி பல வருடங்கள் கடந்த பிறகு குழந்தைகள் பெரியவர்கள் ஆகி விட்ட பிறகு கணவன் மனைவிக்கு இடையில் தகராறு ஏற்படுகின்றது. சிறுபிள்ளைத்தனமான விஷயங்கள்தான் காரணமாக கூறப்படுகின்றன. பொறுமையின்மையும், தவறான நட்பும் இத்தகைய விஷயங்களை உருவாக்கி விடுகின்றன. பல்வேறு வயதில் ஏற்படுகின்ற இந்த குடும்பப் பிரச்சனை –களுக்கான காரணத்தை ஒரு சொல்லில் சொல்வதாக இருந்தால் அதற்கான காரணம் அவர்கள் மார்க்கத்தை விட்டு விலகிச் சென்றிருப்ப –தாகும். மேலும் அவர்கள் மார்க்கப் போதனைளை அறியாமல் இருப்பதாகும். அதில் அவர்களுக்கு ஆர்வம் இல்லாமல் இருப்பதாகும். உலகியல் விஷயங்களிலும் உலகப் பொருள்களிலும் அவர்களுக்கு விருப்பம் இருக்கின்றது. எனவே இந்த விஷயங்களுக்கான தீர்வை நாம் தேட வேண்டும் என்றால் அதனை மார்க்க போதனைகளின் அடிப்படையில் தேட வேண்டும். ஒருபுறம் நம்மை நாமே அஹ்மதிகள் என்று கூறுகின்றோம். நாங்கள் உலகை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குபவர்கள் ஆவோம் என்று வாதம் செய்கின்றோம். பிறகு மார்க்கப் போதனைகளின் அடிப்படையில்தான் இதற்கான தீர்வை நாம் தேட வேண்டும். அவை திருக்குர்ஆனிலும், நபிமொழிகளிலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கியுள்ள போதனைகளிலும் நமக்கு கிடைக்கும். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருப்பது நமது நற்பாக்கியமாகும். நாம் முஸ்லிம்களாக இருக்கின்றோம். பிறகு இக்காலத்தில் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். அவர்கள் நம்மிடம் எல்லா நிலையிலும் உலகத்தை விட மார்க்கத்திற்கு நாங்கள் முன்னுரிமை வழங்குவோம் என்று நம்மிடம் உறுதிமொழி எடுத்துள்ளார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 391) பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த உறுதிமொழியை நாம் மீண்டும் மீண்டும் கூறுகின்றோம். ஆனால் அதை செயல்படுத்த வேண்டிய நேரம் வரும் போது அதை நாம் மறந்து விடுகின்றோம். நல்ல முறையில் மார்க்கத்திற்காக தொண்டு செய்பவர்களும் கூட திருமண சந்தர்ப்பங் –களில் இதனை மறந்து விடுகின்றனர். ஆனால் திருமண சமயங்களில் நமக்கு பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து அது தொடர்பான சிறப்பான வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளது.

அதாவது திருமண விவகாரங்களில் கூட மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்க வேண்டும் என்று வழிகாட்டல் இருக்கின்றது. மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கிய நிலையில் அதனோடு சேர்ந்து உலகமும் கிடைத்து விட்டால் இது அல்லாஹ்வின் அருளாகும். உலகவாதிகளின் சொற்களில் நாம் இதை கூறுவதாக இருந்தால் இதுவொரு போனஸ் ஆகும். ஆனால் உலகத்தை மட்டும் நாம் பார்ப்பதாக இருந்தால் பிறகு அத்துடன் மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவதாக வாதம் செய்தால் பிறகு அதனால் பிரச்சனைகள் உருவாகி விடும். அதில் உண்மை இருக்காது. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய இந்த விஷயத்தை எப்போதும் நினைவில் வைக்க வேண்டும். வரன் தேடும்போது இந்த அடிப்படையான விஷயத்தைக் கருத்தில் கொள்ளுமாறு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதைப்பற்றி ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பு செய்துள்ளார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான்கு காரணங்களுக்காக ஒரு பெண்ணை திருமணம் செய்கின்றனர். ஒன்று, அவளது செல்வத்தின் காரணமாக திருமணம் செய்கின்றனர். அவளது குடும்பத்தின் காரணமாக அவளைத் திருமணம் செய்கின்றனர். பெண்ணின் அழகைப் பார்த்து திருமணம் செய்கின்றனர். அவளது மார்க்கப் பற்றைப் பார்த்து திருமணம் செய்கின்றனர். நீங்கள் மார்க்கப் பற்றுள்ள பெண்ணைத் தேர்ந்தெடுங்கள். அதன் மூலம் இறைவன் உங்களுக்கு நன்மை செய்வானாக என்று அன்னார் கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி கிதாபுன் நிகாஹ் பாபுல் இக்ஃபாயிஃபித்தீனி ஹதீஸ் 5090)

இந்த விஷயத்தை இளைஞர்களும் அவர்களது குடும்பத்தினரும் கண்முன் நிறுத்தி செயல்பட்டால் அவ்வாறே பெண்ணும், பெண்ணின் குடும்பத்தினரும் மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்களாக இருந்தால் பிறகு மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கும் நிலையில் இளைஞர்கள் மற்றும் பெண்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மூலம் எழுகின்ற முறையீடுகள் மற்றும் புகார்கள் விலகி விடும். பையன் மார்க்கப் பற்றுள்ள பெண்ணை தேடும்போது மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கும்போது பிறகு அவன் தனது செயலையும் மார்க்கப் போதனைகளுக்கேற்ப வடிவமைத்துக் கொள்ள வேண்டும். மார்க்கப் போதனை –களுக்கேற்ப அவன் செயல்படும்போது பிறகு காரணமின்றி அவனது வீட்டில் சிறு சிறு விஷயங்களின் காரணமாக குழப்பங்கள் ஏற்படாது. அவ்வாறே இளைஞரின் குடும்பத்தினர் பெண்ணுக்கு சோதனையை உருவாக்குபவர்களாக இருக்க மாட்டார்கள்.

பிறகு இஸ்லாம் இந்த போதனையை வழங்குகின்றது. அதாவது சந்தேகமின்றி மார்க்கப் பற்றுள்ளவர்களைப் பார்ப்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். ஆனால் அதே சமயத்தில் ஒவ்வொரு ஜோடியும் எல்லா சமயங்களிலும் மற்றவருக்கு பொருத்தமானதாக

இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. எனவே திருமண சம்பந்தம் பேசுவதற்கு முன்னதாக இஸ்திஹாரா செய்ய வேண்டியது அவசியமான –தாகும். (அதாவது நன்மையை நாடி துஆ செய்ய வேண்டும்.) (ஸஹீஹ் புகாரி கிதாபுத் த'.வாத் பாபுத்துஆயி இன்தல் இஸ்திஹாரி ஹதீஸ் 6382) அதாவது அல்லாஹ்விடம் திருமண உறவில் நன்மையை வேண்ட வேண்டும். அல்லாஹ்வின் பார்வையில் அந்த சம்பந்தம் நல்லதாக இல்லையென்றால் பிறகு அல்லாஹ் அதில் தடையை ஏற்படுத்தி விட வேண்டும் என்று நாம் அவனிடம் கேட்க வேண்டும்.

இது தொடர்பாக ஒரு முறை ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மிகவும் அழகான முறையில் இவ்வாறு கூறினார்கள்: நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு இந்த விஷயத்தை மிகவும் எளிதாக்கி விட்டார்கள். நமக்கு எத்தகைய வழியை அவர்கள் கூறி இருக்கின்றார்கள் என்றால் நாம் அதற்கேற்ப செயல்பட்டால் பிறகு இன்ஷா அல்லாஹ் நிக்காஹ் கண்டிப்பாக மகிழ்ச்சிக்கு காரணமாக இருக்கும். மேலும் நிக்காஹ்வின் நோக்கமாகவும், குறிக்கோளாகவும் திருக்குர்ஆனில் என்னவெல்லாம் கூறப்பட்டுள்ளனவோ அதற்கேற்ப அந்த திருமணம் நிம்மதி கிடைப்பதற்கும் அன்பும், நேசமும் உருவாவதற்கும் காரணமாக அமையும். திருமணம் செய்வதன் நோக்கமே பரஸ்பரம் ஒருவருக்கு மற்றவரிடமிருந்து நிம்மதி கிடைக்க வேண்டும். பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கிடையில் அன்பு உருவாக வேண்டும் என்பதே ஆகும். பிறகு அது மகிழ்ச்சிக்கு காரணமாக இருக்கும்.

முதலாவது திட்டமாக நிக்காஹ்வின் நோக்கம் மார்க்கத்தைப் பெற்றுக் கொள்வதாகும் என்று கூறப்பட்டுள்ளது. அதாவது மார்க்கப் பற்றுள்ளவர் –களைத் தேட வேண்டும். அழகு ஒருவரை கொள்ளை கொள்வது அல்லது செல்வத்தை பெறுவது அல்லது உயர்வான குடும்பத்தை சார்ந்திருப்பது ஆகியவை திருமணத்தின் நோக்கமாக இருக்கக்கூடாது. முதலில் எண்ணம் நல்லதாக இருக்க வேண்டும். அடுத்து செய்ய வேண்டிய வேலை திருமணத்திற்கு முன்னதாக அதிகமாக இஸ்திஹாரா செய்ய வேண்டும். (குத்பாத்தே நூர் பக்கம் 518-819; 25 டிசம்பர் 1911 -ல் நிகழ்த்தப்பட்ட குத்பா பேருரை) எனவே திருமணம் முடிப்பதற்கு முன்னதாக மனிதன் அல்லாஹ்விடம் நிம்மதியாகவும் ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்தியவாறும் வாழ்வதற்காக துஆ செய்யும் போது மேலும் எனக்கு இதில் நிம்மதியும், நன்மையும் இருந்தால் இந்த உறவு ஏற்பட வேண்டும். இந்த திருமணம் நடக்க வேண்டும் என்று துஆ செய்தால் பிறகு அத்தகைய திருமண வாழ்க்கை அல்லாஹ்வின் அருளால் மிகவும் வெற்றிகரமாக கழிகின்றது. ஆனால் திருமணத்திற்கு பிறகும் கூட ஷய்த்தான் தாக்குதல் நடத்திக் கொண்டே இருப்பான் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். பல்வேறு வழிகளில் அவனது தாக்குதல் இருக்கும். எனவே திருமண வாழ்க்கை எப்போதும் நிம்மதியுடனும், அன்பு மற்றும் நேசத்துடன் கழிய வேண்டும் என்றும் துஆ செய்து வர வேண்டும்.

பிறகு முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இஸ்திஹாரா துஆ செய்வதன் முக்கியத்துவத்தை ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள். இது தொடர்பாக போதனை செய்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

பெரும் பெரும் பணிகளில் ஒன்றாக நிக்காஹ் செய்வதும் இருக்கின்றது. நிக்காஹ் செய்வது ஒன்றும் சிறிய பணியல்ல. பெரும்பாலான மக்களுக்கு, தான் திருமணம் செய்பவர் பெரிய சமுதாயத்தைச் சார்ந்த மனிதராக இருக்க வேண்டும். உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்த மனிதராக இருக்க வேண்டும். அவரிடம் செல்வம் இருக்க வேண்டும். அழகு இருக்க வேண்டும். இளமைப் பருவத்தில் இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். ஆனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மார்க்கப் பற்றுள்ள மனிதர் கிடைப்பதற்கு முயற்சி செய்யுங்கள் என்று கூறுகின்றார்கள். அது பையனாக இருந்தாலும் சரி; பெண்ணாக இருந்தாலும் சரி. எனவே ஒருவரது நல்லொழுக்கம், பழக்க வழக்கம், நேர்மை பற்றிய உண்மையான அறிவை தெரிந்து கொள்வது என்பது கடினமான பணியாக இருப்பதால் மேலும் அதைப்பற்றி விரைவாக நாம் தெரிந்து கொள்ள முடியாத நிலை இருப்பதால் இது மிகவும் கடினமான விஷயமாக இருக்கின்றது. சில உறவுகள் முறியும் போது இந்த காரணத்தைத்தான் அவர்கள் கூறுகின்றனர். இவர் மார்க்கப்பற்றுள்ளவர். நல்லொழுக்கமுள்ளவர் என்று வெளிப்படையாக பார்க்கும் போது எங்களுக்குத் தெரிந்தது. எனவே திருமணத்திற்கு சம்மதித்தோம். ஆனால் பிறகுதான் இவையெல்லாம் தவறானவை என்று தெரிய வந்தது என்று கூறுகின்றனர். இதனை உங்களுக்கு தெரிந்து கொள்ள முடியாது என்பதால்தான் கண்டிப்பாக இஸ்திஹாரா செய்யுங்கள் என்று கூறப்பட்டிருக் –கின்றது. (குத்பாத்தே நூர் பக்கம் 254 குத்பா ஜு'முஆ 13 செப்டம்பர் 1907)

முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறுகின்றார்கள்: முடிவைப் பற்றி அறியாதவர்களாக நாம் இருக்கின்றோம். ஆனால் அல்லாஹ் மறைவான செய்திகளை அறிந்தவனாக இருக்கின்றான். எனவே முதலில் நன்றாக இஸ்திஹாரா செய்ய வேண்டும். இறைவனிடம் உதவி கேட்க வேண்டும். (குத்பாத்தே நூர் பக்கம் 478 குத்பா ஜு'முஆ 28 ஆகஸ்டு 1910)

அன்னார் நிக்காஹ்வின்போது நிகழ்த்தப்படும் குத்பாவில் ஓதப்படுகின்ற வசனங்களை சான்றாகக் காட்டி இவ்வாறு கூறினார்கள் : இந்த வசனங்களில் இறையச்சத்தை கண்முன் நிறுத்தியவாறு இரத்த உறவுகளை பேணுவதை கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. நேரிய கூற்றை கூற வேண்டும். நீங்கள் நாளைக்கென்று எதனை அனுப்பியுள்ளீர்கள் என்பதை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நீங்கள் உங்களது வாழ்க்கையில் வெற்றியை பார்க்க வேண்டுமென்றால் இறையச்சத்தை பேணுவது மிகவும் அவசியமானதாகும்.

இது தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள் : இஸ்திஹாரா செய்த பிறகு நிக்காஹ்விற்கான சந்தர்ப்பம் வருகின்றது. நிக்காஹ்வின் போது ஓதப்படுகின்ற வசனங்களில் இந்த துஆக்களினால் பயன் பெற வேண்டும் என்று கூறப்பட்டிருக்கின்றது. அதாவது ஒவ்வொரு செயலின் முடிவைப் பற்றி சிந்திக்க வேண்டும். அதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். பிறகு திருமண வாழ்த்து கூறுவதற்காக நபி (ஸல்) அவர்கள் இந்த துஆவை கற்றுத் தந்தார்கள். பாரகல்லாஹு லக வபாரக அலைக வ ஜமஅ பைனகுமா ஃபில் ஹைர் (ஜாமிஉத் திர்மிதி கிதாபுன் நிக்காஹ் பாபு மாஜாஅ ஃபீ மா யுகாலு லில் முதஸவ்விஜி) – அதாவது அல்லாஹ் உங்கள் மீது அருள் செய்வானாக! உங்கள் இருவர் மீது அருளை இறக்குவானாக! உங்கள் இருவரையும் நன்மையில் ஒன்று சேர்த்து வைப்பானாக! (குத்பாத்தே நூர் பக்கம் 519-520; 25 டிசம்பர் 1911 -ல் நிகழ்த்தப்பட்ட ஜு'முஆ பேருரை) எனவே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நன்மை மற்றும் அருள் கிடைப்பதற்காக துஆ செய்யப்படுகின்றது. பிறகு அதன் காரணமாக அந்த திருமண உறவு அருளுக்குரியதாக இருக்கின்றது.

சில மக்கள் பாகிஸ்தான் மற்றும் இந்தியாவிலுள்ள சுற்றுச்சூழலின் தாக்கத்திற்கு ஆளாகி இப்போது வரை குடும்பம், பாரம்பரியம் மற்றும் சமுதாயம் ஆகிய விஷயங்களைப் பார்ப்பதில் உழன்று கொண்டிருக் –கின்றனர். ஆனால் அல்லாஹ் கூறுவது என்ன –வென்றால், ஒரு வரன் வரும் போது முதலில் துஆ செய்யுங்கள். துஆ செய்யுங்கள். பிறகு இஸ்திஹாரா –வும் செய்யுங்கள். மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குங்கள். ஆனால் துஆ செய்வது, மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவது ஆகியவற்றிற்குப் பகரமாக குடும்பம், உறவுகள் மற்றும் சமுதாயம் ஆகியவற்றையே இவர்கள் முதலில் பார்க்கின்றனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள் : திருமண சம்பந்தம் பேசும் போது இதை மட்டுமே பார்க்க வேண்டும். அதாவது எவரை நிக்காஹ் செய்கின்றோமோ அவர் நற்பாக்கியமுள்ளவரும், நல்ல இயல்புள்ளவருமாக இருக்கின்றாரா? என்பதைப் பார்க்க வேண்டும். குழப்பத்திற்கு காரணமாக இருக்கின்ற எந்தவொரு ஆபத்திலும் அவர் இருக்கின்றாரா? என்று பார்க்க வேண்டும். மேலும் மார்க்கத்தில் சமுதாயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும் என்ற எந்த அம்சமும் இல்லை. இறையச்சம் மற்றும் நல்ல இயல்பு ஆகியவற்றையே கருத்தில் கொள்ள வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 46; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆக, இவைதான் அடிப்படை விஷயங்களாகும். இறையச்சத்தைப் பார்க்க வேண்டும். அதைத் தவிர்த்துள்ள எல்லா விஷயங்களும் பித்அத்துகளாகும். எனினும், மணப்பொருத்தம் பார்க்க வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. எனவே மணப்பொருத்தத்தை பார்க்க வேண்டும். ஆனால் இதில் கூட மிகவும் கடுமையாக நடந்து கொள்ள வேண்டியதில்லை.

மணப்பொருத்தத்தை எந்த அளவு பார்க்க வேண்டும்? இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப் –பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒருவர் கேட்ட

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

**ஜலாலுத்தீன்**
ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.
Ph : +91 98409 17179

**O.A.N. DOORS & STEELS**
**O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்**
*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*
Ambai Road, (Opp. Karuna Clinic), Kulavanikarpuram, Tirunelveli - 627 005
O.A. NIJAM - 99947 571772
V.A. SAIT - 99430 30230

## திருக்குர்ஆனிலிருந்து

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)

**A. பஷீர் அஹ்மது**
வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

கேள்வி அதற்கு அவர்கள் கூறிய பதில் பற்றிய குறிப்பு இருக்கின்றது. நண்பர் ஒருவர் கேள்வி கேட்டார். அதாவது ஓர் அஹ்மதி தனது மகளை மணப் பொருத்தம் அமையாத இன்னோர் அஹ்மதிக்கு தர விரும்புகிறார். ஆனால், மணப்பொருத்தமுள்ள வேறு வரன்கள் இருக்கத்தான் செய்கின்றன. இது தொடர்பான உங்களது கட்டளை என்ன? என்று ஒருவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், உங்களது விருப்பத்திற்கேற்ப வரன் கிடைத்திருந்தால் மணப்பொருத்தம் இல்லாத சம்பந்தத்தை செய்வதை விட மணப்பொருத்தமுள்ள சம்பந்தத்தைப் பேசி முடிவு செய்வது சிறந்ததாகும். ஆனால் இந்த விஷயம் கடமையானது அல்ல. அதாவது சிறந்தது. எனினும் இது கடமையல்ல என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பதில் கூறினார்கள்.

தொடர்ந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இத்தகைய விவகாரங்களில் ஒவ்வொருவரும் தனது விவகாரத்தையும் தனது சந்ததிகளின் சிறந்த நிலையையும், விவகாரங்களையும் நன்றாக புரிந்து கொள்ள முடியும். மணப்பொருத்தம் பார்த்ததில் அவருக்கு தகுதியானவர் கிடைக்கவில்லை என்றால் வேறு இடத்தில் மணம் முடித்துக் கொடுப்பதில் எந்த குற்றமும் இல்லை. அத்தகைய நபரை அவர் எந்நிலையிலும் மணப்பொருத்தமுள்ள ஒருவருக்குத் –தான் பெண்ணை மணமுடித்துக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துவது ஆகுமானதல்ல. (அல் பத்ர் 11 ஏப்ரல் 1907 பக்கம் 7 தொகுதி 6 எண்.15)

சில மக்களுக்கு தங்களது குடும்பத்தைப் பற்றிய பெருமை அதிகமாக இருக்கும். அத்தகைய ஒரு நபரை ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஒரு முறை நன்கு எச்சரித்தார்கள். அதாவது ஒரு புறம் தனது குடும்பத்தை மிகப் பெரியதாக அவர் கருதுகின்றார். ஆனால் மறுபுறம் அவரது நிலை எவ்வாறு இருக்கிறது என்பதை அவர் கருத்தில் கொள்ளவில்லை.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இது தொடர்பான ஒரு சம்பவத்தை இவ்வாறு கூறுகின்றார்கள் : ஒரு முறை ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் ஒரு நபர் வந்தார். அவர் அவர்களிடம் நான் சய்யிது குடும்பத்தைச் சார்ந்தவன். எனது மகளுக்கு திருமணம் செய்ய வேண்டியது இருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தில் நீங்கள் எனக்கு உதவி செய்யுங்கள் என்று கூறினார். அதற்கு முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நான் உனது மகளின் திருமணத்திற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது மகளான ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு என்ன பொருள்களெல்லாம் கொடுத்தார்களோ அதனை நானும் தர தயாராக இருக்கின்றேன் என்று கூறினார்கள். இதைக் கேட்ட உடன் அந்த நபர் நீங்கள் எனது மூக்கை அறுக்க விரும்புகின்றீர்களா? என்று கேட்டார். சீதனமாக அதிகமாக பொருள்களைக் கொடுக்கின்ற வழக்கம் இருந்து வந்ததால் அதே அளவு அதிகமாக பிரச்சனைகளும் உருவாகி விடுகின்றது. அவர் கூறியதைக் கேட்டு ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், என்ன உமது மூக்கு பெருமானார் (ஸல்) அவர்களது மூக்கை விட பெரியதா? என்று கேட்டார்கள். உங்களது கண்ணியம் நீங்கள் சய்யிது ஆக இருப்பதில் இருக்கிறது என்று நீங்கள் கருதுகின்றீர்கள்.

பிறகு இந்த அளவு பொருள்களை சீதனமாக கொடுப்பதனால் பெருமானார் (ஸல்) அவர்களுக்கே இழிவு ஏற்படாமல் இருக்கும் போது உமக்கு அதனால் என்ன இழிவு ஏற்பட்டு விடப்போகிறது? என்று அன்னார் அந்த நபரிடம் கேட்டார்கள். (த.ஃப்ஸீரே கபீர் அதிகாரம் அஸ்ஸுஅரா தொகுதி 7 பக்கம் 20) நீர் உம்மையே சய்யிது என்று கூறிக் கொள்ளும் போது எந்த விஷயத்தில் உமக்கு இழிவு ஏற்படப் போகின்றது? என்று கேட்டார்கள்.

எனவே சில நேரங்களில் பெண்களைப் பார்த்து இவ்வாறும் குத்திக் காட்டி பேசுகின்றனர். அதாவது இவள் மிகக் குறைவாகவே சீதனம் கொண்டு வந்திருக்கிறாள் என்று கூறுகின்றனர். அவ்வாறு கூறுபவர்களுக்கும் இதில் படிப்பினை இருக்கின்றது. இதன் மூலமாக அவர்கள் அந்த பெண்களுக்கு உணர்வுப்பூர்வமான துன்பங்களை தருகின்றனர். இவ்வாறே பெண் வீட்டாருக்கும் இந்த படிப்பினை இருக்கின்றது. அதாவது உங்களது தகுதிக்கேற்ப நீங்கள் சீதனம் கொடுங்கள். அது சரிதான். கண்டிப்பாக கொடுக்கவும் வேண்டும். ஆனால் எவ்வித காரணமுமின்றி உங்கள் மீது சுமையை போட்டுக் கொள்ளக் கூடாது. இஸ்திஹாரா செய்வதற்கு முன்னதாக எங்கு திருமணம் செய்ய விரும்புகின்றீர்களோ அந்த வீட்டிலுள்ள பெண்ணை பார்க்கவும் வேண்டும். இது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளை இவ்வாறு இருக்கின்றது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ஸல்) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்தேன். அப்போது பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒரு நபர் வந்தார். அவர் ஒரு அன்ஸாரி பெண்ணை திருமணம் செய்வதற்காக தான் தூது அனுப்பியுள்ளதாக பெருமானார் (ஸல்) அவர்களிடம் கூறினார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் அந்த பெண்ணை பார்த்தீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர் பார்க்கவில்லை என்று கூறினார். பெருமானார் (ஸல்) அவர்கள் முதலில் நீர் அந்தப் பெண்ணை பார்க்க வேண்டும். ஏனென்றால், அன்ஸார் கண்களில் ஒரு விஷயம் இருக்கின்றது என்று கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம் கிதாபுன் நிக்காஹ் பாபு நதப மன் அராதன்னிக்காஹி இம்ரஅதுன் இலா அன் நழர இலா வஜ்ஹிஹா)

எனவே பெண்ணைப் பார்ப்பதற்காக பெண்ணின் குடும்பத்தினர்கள் இருக்கின்ற வீட்டிற்குச் செல்வது எந்த குற்றமும் இல்லை. ஆனால் சில இளைஞர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தங்களிடமுள்ள அகம்பாவத்தின் காரணமாக பெண்ணின் குடும்பத்தினருடைய வீட்டிற்கு தங்களது மகனுடன் செல்கின்றனர். திருமணம் சம்பந்தம் செய்யும் துறை இந்த வரனை எங்களுக்கு கூறி இருப்பதால் நாங்கள் பெண்ணை பார்க்க வந்துள்ளோம் என்று கூறுகின்றனர். அகம்பாவத்தின் காரணமாக அங்கு சென்று விநோதமான விஷயங்களைப் பேசுகின்றனர். ஆனால் ஏற்கனவே அவர்கள் புகைப்படத்தையும் பார்த்திருப்பார்கள். ஒருவர் மற்றவர் பற்றிய விபரங்களையும் பேசி இருப்பார்கள். கருத்துக்களை பரிமாறிக் கொள்வார்கள். இவை எல்லாம் செய்த பிறகும் விவகாரத்தை தொங்க விட்டுக் கொண்டிருப் –பார்கள் அல்லது காலம் தாழ்த்திக் கொண்டே செல்வார்கள். இந்த இடைப்பட்ட காலத்தில் வேறொரு வரன் அவர்களுக்கு கிடைத்து விட்டால் முதலில் பேசியதை விட்டு விடுவார்கள். இது தவறான வழிமுறையாகும்.

அஹ்மதி பெண்களில் பெரும்பாலார் தங்களது தாய் தந்தையரை மதிப்பவர்களாக இருக்கின்றனர். பெற்றோர்கள் ஆலோசனை கூறுகின்ற வரன்களை அவர்கள் ஏற்றுக் கொள்ளவும் செய்கின்றனர். ஆனால் சில இடங்களில் நான் ஏற்கனவே கூறியது போன்று பையன் வீட்டார் வருகின்றனர். பெண்ணையும் பார்க்கின்றனர். பிறகு அமைதியாக இருந்து விடுகின்றனர். புகைப்படத்தையும் பார்த்து விட்டு விவரங்களையும் தெரிந்து கொண்ட பிறகு அவர்களுக்கு பெண்ணின் உயரம் என்ன? மற்ற விவரங்கள் என்னவென்பதெல்லாம் தெரிந்து விடுகின்றது. பிறகு எவ்வித காரணமுமின்றி விஷயத்தை தொங்க விடுகின்றனர். ஆக, இவ்வாறு விஷயங்களை பேசி பெண்களுக்கு உணர்வுப் பூர்வமான துன்பத்தையும் கொடுக்கக் கூடாது. திருமணத்தின் குறிக்கோள் மார்க்கத்தை பெற்றுக் கொள்வதாகும் என்று நமக்கு கூறப்பட்டுள்ளது. அதற்கேற்ப நாம் செயல்படுவதாக இருந்தால் பிறகு நம் மூலமாக பெண்களுக்கு உணர்வுப்பூர்வமான எந்தவொரு துன்பமும் ஏற்படக்கூடாது. அவ்வாறே பையன் வீட்டார் தரப்பிலிருந்தும் அகம்பாவத்தை வெளிப்படுத்துவது, உணர்வுகளுடன் விளையாடுவது போன்ற எந்தவொரு சம்பவமும் நிகழக்கூடாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருமணத்தின் குறிக்கோள்களைப் பற்றி எடுத்துக் கூறியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: தீமைகளிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்பதற்காக திருமணம் செய்யுங்கள் என்ற போதனையையே திருக்குர்ஆன் நமக்கு வழங்கி இருக்கின்றது. நிக்காஹ் செய்வதின் நோக்கம் என்ன? தீமைகளிலிருந்து விலகி இருப்பதாகும்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: மேலும் நல்ல சந்ததிகள் கிடைப்பதற்கு துஆ செய்யுங்கள். அதாவது திருமணமாகி விட்டால் பிறகு நல்ல குழந்தைகள் கிடைக்க துஆ செய்ய வேண்டும். இது பற்றி அல்லாஹ் தனது தூய மறையில் இவ்வாறு கூறுகின்றான். مُحۡصِنِیۡنَ غَیۡرَ مُسٰفِحِیۡنَ அதாவது தீமைகளிலிருந்து விலகி இருத்தல் மற்றும் இறையச்சத்தை கடைபிடித்தல் என்ற கோட்டைக்குள் நுழைவது உங்களது திருமணத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். முஹ்ஸினீன் என்ற சொற்களில் இந்த விஷயமும் வந்து விடுகின்றது. அதாவது எவர் திருமணம் செய்யாமல் இருக்கின்றாரோ அவர்கள் ஆன்மீகமான முறையில் ஆபத்துகளில் சிக்கிக் கொள்கின்றனர். அது மட்டுமல்லாமல் உடல் ரீதியான ஆபத்துகளிலும் அவர்கள் சிக்கிக் கொள்கின்றனர். எனவே திருமணம் செய்வதன் மூலமாக மூன்று பலன்கள் கிடைக்கின்றன என்பது திருக்குர்ஆனிலிருந்து நிரூபிக்கப்பட்டிருக் –கின்றது. அந்த நோக்கங்களை நாம் நிறைவு செய்ய வேண்டும். அவை என்ன?

ஒன்று, கற்பைப் பேணுதல் மற்றும் தீமையிலிருந்து விலகி இருத்தல். இரண்டாவது, ஆரோக்கியத்தை பாதுகாத்து கொள்ளுதல். மூன்றாவது, சந்ததிகளை பெறுவது ஆகும். (ஆர்ய தர்ம். ரூஹானி கஸாயின் தொகுதி 10 பக்கம் 22)

இந்த விஷயங்கள் நம் கண்முன்னால் இருந்தால் பிறகு திருமண சம்பந்தம் பேசி முடிக்கும் போது அதில் பிரச்சனைகள் எழாது. எனவே, உலகியல் விஷயங் –களைப் பார்ப்பதற்கு பதிலாக மனிதன் முதலில் மார்க்கத்தை பார்க்க வேண்டும். மேலும் இந்த விஷயங்களை கண்முன் நிறுத்தியவாறு திருமணம் செய்ய வேண்டும். ஒரு பெண்ணை திருமணம் செய்து அவளுக்கு பிரியா விடை கொடுத்து அனுப்பும் போது கணவனுக்கென்று தனியாக வீடு இல்லாமல் இருந்தால் அதன் காரணமாகவும் சில இடங்களில் குழப்பமும் சண்டையும் ஏற்படுகின்றது. அந்த இளைஞர் தனது தாய் தந்தையருடன் இருக்கின்றார். சில சந்தர்ப்பங்களில் நிலைமைகளுக்கேற்ப அவருக்கு வேறு வழி இருக்காது. அவர் நிர்ப்பந்தமான சூழ்நிலையில் இருக்கின்றார். அதாவது தனியாக வீடு எடுத்து இருக்கும் அளவிற்கு பையனுக்கு போதிய வருமானம் இருக்காது அல்லது பையன் இப்போதும் படித்துக் கொண்டிருப்பார். எனவே, பையனுக்கு போதிய வருமானம் இல்லாத காரணத்தால் இப்போது தனியாக வீடு எடுப்பது அவருக்கு கஷ்டமாக இருக்கும் என்பது பெண்ணுக்கும் தெரிந்திருக்க வேண்டும். அத்தகைய நிலைமைகளில் அந்த பெண் சிறிது காலம்

வரை தனது மாமனார் வீட்டிலேயே இருக்க வேண்டும். சில நேரங்களில் பெண்ணும் அவரது பெற்றோர்களும் அவசரம் காட்டுவதன் விளைவாக இந்த உறவை முறித்துக் கொள்கின்றனர். திருமணம் நடந்த பிறகு பெண் குலா பெற்றுக் கொள்கின்றார். இது தவறான வழிமுறையாகும். இந்நிலையில் அவர்கள் மாமனார் வீட்டில் இருக்க முடியவில்லை என்றால் முதலிலேயே அவர்கள் தெரிவிக்க வேண்டும். இவ்வளவு விரைவாக திருமணமும் செய்து கொள்ளக் கூடாது. ஏனென்றால், பையன் வீட்டாரின் நிலைமையும் அதற்கேற்ப இல்லை. ஆனால் சில இளைஞர்கள் தங்களது பொறுப்பற்ற இயல்பு அல்லது தாய், தந்தையர் கூறியதன் காரணமாக பெற்றோர்களுடன் இருக்கின்றனர். ஆனால் அவர்களால் தனியாக வீடு எடுத்து இருக்க முடியும். தாய், தந்தையர் வயது முதிர்ந்தவர்களாக இருக்கின்றனர் என்று அவர்கள் சாக்குப்போக்கு கூறுகின்றனர். இதன் காரணமாக அவர்களோடு நான் இருக்க வேண்டியது அவசியமாகும் என்று காரணம் கூறுகின்றனர். ஆனால் மற்ற சகோதர சகோதரிகளும் கூட தாய் தந்தையருடன் இருந்து வருவர். அவ்வாறு மற்ற சகோதர சகோதரிகள் இல்லாமல் இருந்தாலும் கூட தாய், தந்தையர் தனியாக இருக்க முடியாத அளவிற்கு அவர்களது உடல் நிலை அந்த அளவு மோசமாகவும் இருப்பதில்லை. இதில் பையனின் தாய், தந்தையரின் பிடிவாதம் மட்டுமே இருக்கின்றது.

இஸ்லாம் இதுபற்றி என்ன கூறுகின்றது? அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

لَيْسَ عَلَى الْأَعْمٰى حَرَجٌ وَّلَا عَلَى الْأَعْرَجِ حَرَجٌ وَّلَا عَلَى الْمَرِيْضِ
حَرَجٌ وَّلَا عَلٰٓى اَنْفُسِكُمْ اَنْ تَاْكُلُوْا مِنْۢ بُيُوْتِكُمْ اَوْ بُيُوْتِ اٰبَآئِكُمْ
اَوْ بُيُوْتِ اُمَّهٰتِكُمْ اَوْ بُيُوْتِ اِخْوَانِكُمْ اَوْ بُيُوْتِ

அதாவது குருடன், முடவன், நோயாளி ஆகியோர் மீது எந்த குற்றமும் இல்லை. நீங்கள் உங்களது வீடுகளில் அல்லது உங்களது மூதாதையர்களின் வீடுகளில் அல்லது உங்களது தாய்மார்களின் வீடுகளில் உண்பதில் எந்தக் குற்றமுல் இல்லை. (24:62) இது மிக நீண்ட வசனமாகும்.

ஆனால் வசனத்தின் இந்த பகுதிக்கு மட்டும் விளக்கம் அளித்தவாறு ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மிகவும் அழகிய முறையில் இதற்கு விளக்கம் தந்துள்ளார்கள். இந்தியாவில் பெரும்பாலார் தங்களது வீடுகளில் மாமியாருக்கும் மருமகளுக்கும் இடையில் நிகழ்கின்ற சண்டைகளைப் பற்றி புகார் கூறிக் கொண்டே இருக்கின்றனர். திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப செயல்பட்டால் இப்படி எதுவும் நிகழாது. பாருங்கள். இந்த வசனத்தில் வீடுகள் தனித்தனியாக இருக்க வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. தாயின் வீடு தனியாகவும், திருமணமாகிய சந்ததிகளின் வீடு தனியாகவும் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. தனித்தனியாக வீடுகள் இருப்பதன் காரணமாகவே உணவு உண்பதற்கான அனுமதி பற்றியும் கூறப்பட்டிருக்கின்றது. (ஹகாயிகுல் ∴பூர்கான் தொகுதி 3 பக்கம் 233) எனவே, தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமான சூழ்நிலைகள் இருந்தாலேயொழிய வீடுகள் தனித்தனியாகத்தான் இருக்க வேண்டும். வீடுகள் தனித்தனியாக இருந்தால் மாமியாருக்கும், மருமகளுக்கும், நாத்தனாருக்கும், அண்ணிக்கும் இடையிலுள்ள பிரச்சனைகளும் முடிவுக்கு வந்து விடும். அத்துடன் பெண்ணுக்கும் தனது பொறுப்பு பற்றிய உணர்வு ஏற்படும்.

இங்கு இதையும் நான் கூற விரும்புகின்றேன். சிலர் தங்களது பெண்ணுக்கு திருமணம் செய்து முடிப்பதற்கு முன்னதாக பையனிடம் உங்களுக்கென்று சொந்த வீடு இருக்கின்றதா? என்று கேட்கின்றனர். அதாவது அந்த சொத்து அவருடையதா? அந்த வீட்டிற்கு எஜமானர் அவர்தானா? என்று கேட்கின்றனர். அவர் அந்த வீட்டிற்கு எஜமானராக இல்லாமல் இருந்தால் பிறகு அவரை அவர்கள் திருமணம் செய்வதில்லை. இதுவும் மிகவும் தவறான வழிமுறையாகும். எனவே உலகப் பேராசைகளுக்கு பகரமாக பெண் வீட்டார் பையனின் மார்க்கத்தைப் பார்க்க வேண்டும். வீடு மெது மெதுவாக உருவாகி விடும். அந்த வீட்டில் அன்பு, நேசம் இருக்கும் போது அந்த வீடு தானாகவே உருப்பெற்று விடும்.

சில நாடுகளிலிருந்து எனக்கு இவ்வாறு புகார்கள் வருகின்றன. சில முரப்பிகள் படித்து முடித்து வெளியில் வரும்போது அவர்களுக்கு தங்களது மகளை சிலர் மணமுடித்துக் கொடுக்காததற்கு காரணம் அந்த முரப்பி ஜமாஅத்திற்காக தனது வாழ்வை அர்ப்பணித்து விட்டார் என்பதாகும். இதுவும் தவறான வழிமுறையாகும். இதற்கு பகரமாக அவர்கள் மார்க்கத்தைத்தான் பார்க்க வேண்டும்.

பிறகு ஆண்களுக்கு அல்லாஹ் இவ்வாறு போதனை செய்கின்றான். அதாவது பெண்கள் கூறுகின்ற விஷயத்தைக் கேட்டு அவசரமாக எந்த முடிவையும் எடுத்து விடக்கூடாது. பிறகு அவர்களுடன் தவறான முறையில் நடந்து கொள்ளவும் கூடாது. அவர்கள் கூறும் விஷங்களை தீயதாக கருதக் கூடாது. அல்லாஹ் இது தொடர்பாக கூறுகின்றான்:

وَعَاشِرُوْهُنَّ بِالْمَعْرُوْفِ ۚ فَاِنْ كَرِهْتُمُوْهُنَّ فَعَسٰٓى
اَنْ تَكْرَهُوْا شَيْـًٔا وَّيَجْعَلَ اللّٰهُ فِيْهِ خَيْرًا كَثِيْرًا ﴿۲۰﴾

அதாவது இந்த பெண்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டு வாழ்க்கையை கழியுங்கள். நீங்கள் அவர்களை வெறுத்தால் நீங்கள் வெறுக்கின்ற ஒன்றில் அல்லாஹ் அதிகமான நன்மைகளை வைத்திருக்கலாம். (4:20)

இந்த வசனத்திற்கு ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் இவ்வாறு விளக்கம் கூறுகின்றார்கள் : அன்பர்களே! பாருங்கள். உங்களது மனைவியின் ஏதேனும் விஷயம் உங்களுக்கு பிடிக்காமல் இருந்தாலும் நீங்கள் அவர்களுடன் சிறந்த முறையில் நடந்து கொள்ளுங்கள். அல்லாஹ் கூறுகின்றான். நாம் இதில் சிறப்பை இடுவோம். ஒரு விஷயம் உண்மையிலேயே சிறப்பானதாக இருக்கலாம். ஆனால் அது உங்களுக்கு தீயதாக தோன்றலாம். (குத்பாத்தே நூர் பக்கம் 255; 13 செப்டம்பர் 1907-ல் நிகழ்த்தப்பட்ட குத்பா பேருரை) எனவே மனைவியை விட்டு விடுவதில் அவசரம் காட்டுகின்ற அல்லது அவளுடன் நல்ல முறையில் நடந்து கொள்கின்ற அல்லது பெண்களது உணர்வை கருத்தில் கொள்ளாமல் இருக்கின்ற அல்லது பெண்கள் கூறுகின்ற சில விஷயங்களை தீயதாக கருதி அவர்களுடன் தவறான முறையில் நடந்து கொகின்ற கணவர்களுக்கு இந்த வசனத்தில் போதனை செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது அவர்கள் பெண்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். உங்களது எண்ணத்திற்கேற்ப உங்களது மனைவியிடத்தில் வெறுக்கத்தக்க ஒரு விஷயம் இருக்கின்றதென்றால் அதைப்பற்றி முடிவெடுப்பதிலும் கூட நீங்கள் அவசரப்பட வேண்டாம். ஏனென்றால் வெளிப்படையில் வெறுக்கத்தக்கதாக தெரிகின்ற விஷயத்திலும் கூட நன்மை மறைந்திருக்க –லாம். அவசரம் காட்டுவதன் மூலமாகவும் தவறாக நடந்து கொள்வதன் மூலமாகவும் அந்த நன்மையில் இருந்து விலக்கப்பட்டவர்களாக நீங்கள் ஆகி விடுவீர்கள். எனவே பெண்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது தொடர்பாக அல்லாஹ் பல்வேறு கோணங்களில் நமக்கு விளக்கிக் கூறியுள்ளான். இவற்றை ஆண்கள் தங்கள் கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும்.

பிறகு ஆண்கள் செய்கின்ற இரண்டாவது திருமணத்தின் காரணமாகவும் அல்லது இரண்டாம் திருமண ஆசையின் காரணமாகவும் பல பிரச்சனை –களும் முன் வருகின்றன. குடும்பங்களில் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டுள்ளன. ஆண்கள் இதை நினைவில் கொள்ள வேண்டும். இஸ்லாத்தில் இரண்டாவது திருமணத்திற்கான அனுமதி இருக்கின்றதென்றால் அது சில நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். ஆகுமான சில தேவைகளை கருத்தில் கொண்டவாறே இந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஒருவருக்கு குழந்தைகள் இருக்கின்றனர். குடும்பம் செழிப்பாக இருக்கின்றது. அப்படிப்பட்டவரும் கூட இங்குள்ள சுற்றுச்சூழலின் காரணமாக அல்லது அல்லாஹ் ஓரளவு அவருக்கு வசதியை தந்ததன் காரணமாக தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்காக இரண்டாவது திருமணம் செய்கின்றார் என்றால் அல்லது தவறான முறையில் நட்பு வைத்து ஒருவரை திருமணம் செய்து கொள்கின்றார் என்றால் அது தவறாகும்.

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விளக்கமான வழிகாட்டல் இருக்கின்றது. அதை அவர் தன் கண்முன்னால் நிறுத்த வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவனது சட்டத்தை அவனது நாட்டடத்திற்கு எதிராக ஒருபோதும் நடைமுறைப்படுத்தக்கூடாது. தனது மன இச்சைகளின் ஒரு தூணாக அதனை அமைத்துக் கொள்ளும் வகையில் அதிலிருந்து பலனடையக்கூடாது. உங்களது மன இச்சைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அதனை ஒரு கேடயமாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. நினைவில் கொள்ளுங்கள். அவ்வாறு செய்வது பாவமாகும். காம உணர்வு உங்களிடத்தில் மிகைத்து விடக்கூடாது என்று இறைவன் உங்களிடம் மீண்டும் மீண்டும் கூறுகின்றான். மாறாக, ஒவ்வொரு விஷயத்திலும் உங்களது குறிக்கோள் இறையச்சத்தை பெறுவதாக இருக்க வேண்டும். பெரும்பாலும் ஷரீஅத்தை கேடயமாக பயன்படுத்திக் கொண்டு தமது இச்சைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பல மனைவிகளை திருமணம் செய்தால் அதைப் பார்த்தே ஏனைய சமுதாயங்கள் நம்மீது ஆட்சேபனை செய்வதைத் தவிர வேறு என்ன விளைவு ஏற்பட்டு விடும்? முஸ்லிம்களுக்கு பல மனைவிகளை திருமணம் செய்வதைத் தவிர வேறு வேலையே இல்லை என்று அவர்கள் கூறுவார்கள். மனதின் சொந்த விருப்பங் –களையும், காம உணர்வையும் கேடயமாக வைத்துக் கொண்டு நீங்கள் திருமணம் செய்வதாக இருந்தால் இது அனுமதிக்கப்பட்டதல்ல. இது முற்றிலும் தவறாகும். உங்களது பழைய மனைவிமார்களை விட்டு விட்டு தவறான தொடர்புகள் மூலம் புதிதாக பெண்களை திருமணம் செய்து கொள்வது தவறான வழிமுறை ஆகும். இதில் மக்கள் ஆட்சேபனை செய்தால் அது சரியாகத்தான் இருக்கும். முஸ்லிம்களுக்கு திருமணம் செய்வதைத் தவிர வேறு எந்த வேலையும் இல்லை என்று அவர்கள் கூறுவது சரியாகி விடும் என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

விபச்சாரம் என்பது மட்டும் பாவமாகாது. மாறாக, காம உணர்வு பகிரங்கமாக உள்ளத்தில் ஏற்படுவது தான் பாவமாகும். உலக பொருள்களிலிருந்து பயனடைகின்ற விஷயம் மனிதனுடைய வாழ்வில் மிகவும் குறைவானதாக இருக்க வேண்டும். ஃபல் யஸ்கக்கு கலீலன் ஃபல் யஃப்கூ கஸீரா அதாவது குறைவாக சிரிக்க வேண்டும். அதிகமாக அழ வேண்டும். ஆனால் எவர் உலகப் பொருள்களிலிருந்து அதிகமாக பயனடைகின்றாரோ உலக விருப்பங்கள், உலக பலன்கள் ஆகியவை எவரிடம் அதிகமாக இருக்கின்றதோ மேலும் இரவு பகலாக அவர் தமது மனைவியருடன் இருந்து வருகின்றார் என்றால் அவரிடம் உருக்கமும், அழக்கூடிய நிலையும் எப்போது ஏற்பட முடியும். மனிதன் ஈடுபடுகின்ற மற்ற வீணான விஷயங்களின் நிலையும் இதுவேயாகும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பெரும்பாலான மக்களின் நிலை இப்படித்தான் இருக்கின்றது. அவர்கள் ஓர் எண்ணத்திற்கு

ஆதரவாகவும் அதைப் பின்பற்றியவாறும் அதற்காக எல்லாவற்றையும் செய்கின்றனர். அதன் காரணமாக இறைவனின் அசல் நாட்டத்திலிருந்து அவர்கள் தொலைவில் விலகிச் சென்று விடுகின்றனர். இறைவன் சில பொருள்களை ஆகுமானவையாக ஆக்கி இருக்கின்றான் என்றாலும் அதிலேயே தனது முழு வாழ்நாளையும் கழித்து விட வேண்டும் என்பது இதன் பொருளல்ல. அல்லாஹ் தனது அடியானின் பண்பு பற்றி கூறும் போது يَبِيْتُوْنَ لِرَبِّهِمْ سُجَّدًا وَّ قِيَامًا அதாவது அவர்கள் தங்களது இறைவனுக்காக முழு இரவையும் சஜ்தா செய்வதிலும் நிற்பதிலும் கழிக்கின்றனர் என்று கூறுகின்றான். இப்போது பாருங்கள். இரவு பகலாக மனைவியருடன் இருப்பதிலேயே மூழ்கி இருப்பவன் இறைவனது விருப்பதிற்கேற்ப இரவை இறை வணக்கத்தில் எவ்வாறு கழிக்க முடியும். அப்படிப்பட்டவர் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் செய்து என்ன செய்கிறார்கள்? அந்த மனைவியரை அவன் இறைவனுக்கு இணையாக ஆக்குகிறார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒன்பது மனைவியர் இருந்தனர். அவ்வாறு இருந்தும் கூட அவர்கள் பல இரவுகள் முழுவதுமாக இறைவனை வணங்குவதில் கழித்துள்ளார்கள்.

தொடர்ந்து அன்னார் இவ்வாறு கூறுகின்றார்கள்: நன்றாக நினைவில் கொள்ளுங்கள். காம உணர்வு உங்களிடம் மிகைத்து விடக்கூடாது என்பதே இறைவனின் உண்மையான விருப்பமாகும். இறையச்சத்தை முழுமையடையச் செய்வதற்கு தேவை ஏற்பட்டால் நீங்கள் மேலும் பெண்களை திருமணம் செய்து கொள்ளலாம். அதாவது இரண்டாவது திருமணம் செய்வது கூட இறையச்சத்தின் காரணமாக இருக்க வேண்டும். எனவே இரண்டாவது திருமணம் செய்கின்ற அனைவரும் அந்த திருமணம் இறையச்சத்தின் அடிப்படையில் அமைந்திருக்கின்றதா? என்பதை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அல்லது தங்களது மன உணர்வின் காரணமாக அவர்கள் திருமணம் செய்கின்றார்களா? என்பதை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த நபர் காம உணர்வை பின்பற்றிச் சென்றவாறு அதிகமாக பெண்களை திருமணம் செய்து கொள்கின்றாரோ அவர்கள் இஸ்லாத்தின் சத்தை பெற்றுக் கொள்வதிலிருந்து தூரத்தில் இருக்கின்றார்கள். உதயமாகின்ற ஒவ்வொரு நாளிலும் அவ்வாறே வருகின்ற ஒவ்வொரு இரவிலும் அவர் கசப்பான வாழ்க்கையை மேற்கொள்ளாமல் இருந்தால் முற்றிலும் அழாமல் அதிகமாக சிரித்துக் கொண்டே இருந்தால் அவர் அழிவின் அடையாளமாக இருக்கின்றார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 65-67; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்த்தில் அச்சடிக்கப்பட்டது) பிறகு அன்னார் பெண்களுக்கும் போதனை செய்தார்கள். ஆகுமான காரணங்களின் அடிப்படையில் ஆண் திருமணம் செய்ய விரும்பினால் பிறகு பெண்கள் அதை எதிர்த்து கூச்சலிடக் கூடாது. இந்த துன்பத்தை உங்கள் மீது அல்லாஹ் கொண்டு வராமல் இருப்பதற்கு துஆ செய்வதற்கான உரிமை உங்களுக்கு இருக்கின்றது என்றும் அன்னார் கூறினார்கள். எவ்வாறு ஆண்களிடம் உங்களது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக மட்டும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்று கூறினார்களோ அவ்வாறே பெண்களுக்கும் இந்த துன்பம் அவர்களுக்கு வராமல் இருக்க துஆ செய்யும் உரிமை இருக்கிறது என்று அவர்கள் கூறுகின்றார்கள்.

பிறகு கூறுகின்றார்கள்: நமது இந்த காலக்கட்டத்தில் சில குறிப்பான பித்அத்துகளில் பெண்களும் மூழ்கி உள்ளனர். அந்த பெண்கள் பல திருமணங்கள் செய்வதை மிகவும் தீய பார்வையுடன் பார்க்கின்றனர். அல்லது அவர்களுக்கு அதில் நம்பிக்கை இருப்பதில்லை. இறைவனது ஷரீஅத் எல்லாவிதமான சிகிச்சையையும் தன்னுள் வைத்திருக்கிறது என்பதை அவர்கள் அறிவிதில்லை. இஸ்லாத்தில் பலரை திருமணம் செய்கின்ற விஷயம் இல்லாமல் இருந்தால் ஆண்களுக்கு சில நேரங்களில் கட்டாய சூழ்நிலைகளில் இரண்டாவது திருமணம் செய்ய வேண்டியது இருந்தால் இந்த ஷரீஅத்தில் அவர்களுக்கு அதற்கான சிகிச்சை கிடைக்காமல் போய் விடும். உதாரணமாக ஒரு பெண்ணுக்கு பைத்தியம் பிடித்து விட்டால் அல்லது அவள் செயலற்றுப்போகும் அளவிலுள்ள ஏதாவதொரு நோயில் பீடிக்கப்பட்டு விட்டால் அல்லது பெண் செயலற்று போய் கருணை காட்டுவதற்கு தகுதியுடையவளாக ஆகி விட்டால் அத்தகைய சூழ்நிலையில் ஒருவர் தனிமையாக வாழ்வதில் பொறுமை காட்ட முடியவில்லை என்றால் அப்படிப்பட்ட நிலையில் அவர்களுக்கு இரண்டாம் திருமணத்திற்கான அனுமதி வழங்கப்படவில்லை என்றால் அது ஆணின் சக்திகளின் மீது அநீதி இழைப்பதாகும். இறைவனது ஷரீஅத்தானது இந்த விஷயங்களைப் பார்த்தவாறு ஆண்களுக்கு இதற்குரிய தீர்விற்கான வழியை திறந்து வைத்திருக்கின்றது. அவ்வாறே பெண்களுக்கான வழியையும் அது திறந்து தந்திருக்கின்றது.

அதாவது ஆண் செயலற்றுப்போய் விட்டால் அந்த பெண், நீதிபதியின் மூலமாக அவனிடமிருந்து குலா பெற்று தன்னை விடுவித்துக் கொள்ளலாம். இவ்வாறு குலா பெறுவது தலாக்கிற்கு ஈடானதாக இருக்கின்றது. இறைவனது ஷரீஅத் மருந்து விற்கப்படுகின்ற ஒரு கடையைப் போன்றதாகும். ஒவ்வொரு நோய்க்கான மருந்தும் கிடைக்கின்ற கடையாக அது இல்லாமல் இருந்தால் அந்த கடை இயங்க முடியாது. எனவே ஆண்களுக்கும் கூட இத்தகைய கஷ்டமான சூழ்நிலைகள் வருவதில்லையா? என்பதைப் பற்றி சிந்தனை செய்யுங்கள். அந்த நிலைமகளின் காரணமாகத்தான் அவர்கள் இரண்டாவது திருமணம் செய்வதன் நிர்பந்தத்திற்கு ஆளாகின்றனர் என்பது உண்மையல்லவா!

எல்லா துன்பங்களுக்கும் சிகிச்சையாக இல்லாத அந்த ஷரீஅத்தால் எந்த பயன் ஏற்படப்போகின்றது. பாருங்கள். பைபிளில் தலாக் கொடுப்பதற்கு விபச்சாரத்தில் ஈடுபது மட்டுமே நிபந்தனையாக வைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய நூற்றுக்கணக்கான காரணிகள் மற்றும் காரணங்கள் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் அவர்கள் உயிரின் பகைவர்களாக ஆவதற்கு காரணமாக இருக்கின்றன. அவற்றை பற்றி பைபிளில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

பெண்களுக்கு போதனை செய்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் கவலை கொள்ள வேண்டாம். பைபிளைப் போன்று உங்களுக்கு கிடைத்திருக்கின்ற வேதம் மனிதனின் ஆதிக்கத்தின் கீழ் வரவேண்டிய தேவை உடையதாக இல்லை. அந்த வேதத்தில் எவ்வாறு ஆண்களுக்குரிய உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளனவோ அவ்வாறே பெண்களுக்குரிய உரிமைகளும் பாதுகாக்கப்பபட்டிருக்கின்றன.

ஆண்கள் பலதார மணம் செய்து கொள்வதில் பெண்கள் வெறுப்படைகின்றனர் என்றால் அந்நிலையில் அந்த பெண் நீதிபதியின் மூலமாக அந்த ஆணிடம் இருந்து குலா பெற்றுக் கொள்ளலாம். முஸ்லிம்களிடம் பல்வேறு வடிவத்தில் ஏற்பட இருக்கின்ற பிரச்சனைகளுக்கான தீர்வை தன்னுடைய ஷரீஅத்தின் மூலமாக எடுத்துக் கூறுவது இறைவனின் கடமையாக இருக்கின்றது. அதன் மூலமாக அந்த ஷரீஅத் குறை உள்ளதாக இருக்காது. எனவே பெண்களே! ஆண்கள் இரண்டாவது திருமணம் செய்ய விரும்பினால் அதன் காரணமாக நீங்கள் இறைவனை பழித்துக் கூறாதீர்கள். மாறாக, இறைவன் உங்களை துன்பத்திலிருந்தும், சோதனையிலிருந்தும் பாதுகாப்பாக வைப்பதற்கு நீங்கள் துஆ செய்யுங்கள். எனவே ஆண்கள் இரண்டாவது திருமணம் செய்ய விரும்பும்போது பெண்கள் அந்த துன்பத்திலிருந்தும் சோதனையில் இருந்தும் தங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு இறைவனிடம் துஆ செய்யலாம். எந்த ஆண் இருவரை திருமணம் செய்து கொண்டு அவர்களுக்கிடையே நீதியுடன் நடந்து கொள்ளவில்லையோ அவர் மிகவும் அநியாயக்காரராக இருக்கின்றார். எனவே நீங்கள் சுயமே இறைவனுக்கு கீழ்ப்படியாமல் இருந்து இறை கோபத்திற்கு ஆளாகி விடாதீர்கள். ஒவ்வொருவரிடமும் அவரது செயல் தொடர்பாக கேள்வி கேட்கப்படும். நீங்கள் இறைவனது பார்வையில் நல்லவராக ஆகிவிடுங்கள். பிறகு அதனால் உங்களது கணவரும் நல்லவராக ஆக்கப்படுவார். ஷரீஅத் பல்வேறு காரணங்களை கருத்தில் கொண்டவாறு பலதார மணம் செய்து கொள்வதை ஆகுமானதாக ஆக்கி இருந்தாலும் இறை நியதியின் சட்டம் உங்களுக்காக திறந்து இருக்கின்றது. ஷரீஅத்தின் சட்டம் உங்களால் சகித்துக் கொள்ள முடியாததாக இருந்தால் பிறகு நீங்கள் துஆ மற்றும் இறை நியதியின் சட்டத்தில் இருந்து பயனடையுங்கள். ஏனென்றால் இறை நியதியின் சட்டம் ஷரீஅத்தின் சட்டத்தின் மீது வெற்றி பெற்று விடுகின்றது. தக்வாவை கடைபிடியுங்கள். உலகின் மீதும் அதன் அழகின் மீதும் அதிகமாக உள்ளத்தை ஒன்றச் செய்யாதீக்ள். (கிஷ்தி நூஹ். ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 80-81) இறை நியதியின் சட்டம் என்பது என்ன? அது அல்லாஹ் அந்த ஆணின் உள்ளத்தில் இருந்து இரண்டாவது திருமணம் செய்து கொள்கின்ற எண்ணத்தை அகற்றி விடுவதாகும். அவருக்கு அனுமதி இருந்தும் கூட நீங்கள் அதற்கு எதிராக துஆ செய்தால் மேலும் அந்த துஆ உங்களது உள்ளத்தில் இருந்து எழுந்ததாக இருந்தால் உங்களது அந்த துஆ ஏற்றுக் கொள்ளப்படும். பிறகு நீங்கள் அந்த துன்பத்தில் விழ மாட்டீர்கள். பிறகு திருமணம் செய்து கொள்வதற்கான சந்தர்ப்பமே அவருக்கு கிடைக்காமல் போய்விடும்.

அல்லாஹ் ஜமாஅத்திலுள்ள நபர்களுக்கு அவர்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அறிவையும் நல்வாய்ப்பையும் வழங்குவானாக! அதாவது அவர்கள் தங்களது குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளை அல்லாஹ் கூறியுள்ள போதனைகளுக்கேற்ப செய்யக் கூடியவர்களாக இருப்பார்களாக. மேலும் உலக விருப்பங்களை அடைவதற்கு பகரமாக மார்க்கத்திற்கு அவர்கள் முன்னுரிமை வழங்கக்கூடியவர்களாக இருப்பார்களாக. அல்லாஹ்வின் மீதுள்ள அச்சமும் தக்வாவும் எப்போதும் அவர்களின் கண் முன்னால் இருக்கட்டுமாக. இதுபோன்றே புதிய வரன்கள் அமைவதினால் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளையும் அல்லாஹ் அகற்றுவானாக. இவ்வாறு பல பிரச்சனைகளும் ஏற்படுகின்றன. திருமணம் செய்வது உலக நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மட்டும் அல்ல என்பதை புரிந்து கொள்வதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங்குவானாக! இன்னும் கூறுவதென்றால், திருமணம் செய்வது மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கி வருங்கால தலைமுறையையும் மார்க்கத்தில் வழிநடத்துவதற்கான ஒரு வழியாகும் என்பதை புரிந்து கொள்பவர்களாக அல்லாஹ் அவர்களை ஆக்குவானாக! மேலும் அது நல்ல சந்ததிகளை உருவாக்குவதற்கு காரணமாக இருக்கின்றது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளும் படி அல்லாஹ் செய்வானாக! அதன் மூலமாக வருங்கால தலைமுறை பாதுகாப்பாக இருக்கட்டும். மேலும் அந்த தலைமுறை இஸ்லாத்திற்கு தொண்டாற்றக் கூடியதாக இருக்கட்டும்! இவ்வாறு அது இறைவனின் அருள்களுக்கு வாரிசாகட்டும்!

தொழுகைக்குப் பிறகு நான் சிலருக்கு ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். அவற்றில் இரண்டு

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 6 April 2017 Issue No. 14

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

ஜனாஸா ஹாழிர் ஆகும். இதைத் தவிர இருவருக்கு ஜனாஸா காயிப் தொழுகையும் நடத்தப்படும். முதலாவது ஜனாஸா மதிப்பிற்குரிய நவாஸ் முஃமின் சாஹிபுடையதாகும். வாழ்க்கையை அர்ப்பணித்தவர். மதிப்பிற்குரிய குதா ஃபக்ஷ் முஃமின் சாஹிப் அவர்கள் வாழ்க்கையை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்தவர்கள் ஆவார்கள். இவர்கள் **15** பிப்ரவரி **2017** ல் தமது **85** வது வயதில் ஜெர்மனியில் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் முஃமின் ஜி அவர்களின் மருமகன் ஆவார்கள். இவர்களது தந்தையார் ஏறக்குறைய **1922** ல் காதியான் சென்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது கைகளில் பைஅத் செய்தார்கள். இவர்களது தந்தையாரின் பல குழந்தைகளும் பிறந்ததும் வஃபாத்தாகி விட்டனர். இதனால் அஹ்மதி அல்லாதவர்கள் இவர் அஹ்மதியாக இருப்பதால்தான் இவர்களது குழந்தைகள் மரணித்து விடுகின்றார் என்று அவரைப் பற்றி இழிவாக பேசினர். இதனால் இவர்களது தந்தையார் இவர்கள் பிறப்பதற்கு முன்னதாக இந்த எனது குழந்தை உயிருடன் இருந்தால் நான் அதை இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதற்காக அர்ப்பணித்து விடுவேன் என்று இறைவனிடம் வாக்குறுதி செய்திருந்தார். எனவே, இவர்களும் இவர்களுக்குப் பிறகு இன்னும் நான்கு குழந்தைகளும் உயிருடன் இருந்தனர். அவர்கள் நீண்ட ஆயுளையும் பெற்றனர். இவர்களது தந்தையார் இவர்கள் பிறந்த போதே இவர்களை அல்லாஹ்வின் வழியில் அர்ப்பணித்து விட்டார்கள். அவர்கள் **1959** ஆம் ஆண்டில் ஜாமிஆ அஹ்மதிய்யாவிலிருந்து படிப்பை நிறைவு செய்தார்கள். அதற்குப் பிறகு முழு வாழ்நாளையும் ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதில் கழித்தார்கள்.

ரப்வாவிலுள்ள அல்ஃபஸ்ல் அலுவலகத்திலும், தாருல் கஸாவிலும், வஸிய்யத் அலுவலகத்திலும் நீண்ட காலம் தொண்டாவற்றுவதற்கான வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது. **1969** –ல் இவர்கள் ஜெர்மனி சென்று விட்டார்கள். அங்கும் நீண்ட காலம் இவர்களுக்கு தொண்டு புரிவதற்கான வாய்ப்பு கிடைத்தது. தப்லீக் செய்வதில் இவர்களுக்கு பேரார்வம் இருந்தது. தொழுகையும், நோன்பையும் கடைபிடிப்பவராகவும், மிகவும் அதிகமாக பொறுமையை கடைபிடிப்பவராகவும், நன்றி செலுத்துபவராகவும், தூய உள்ளம் கொண்டவராகவும் இவர்கள் திகழ்ந்தார்கள். திருக்குர்ஆனின் மீது அளவு கடந்த அன்பு இருந்தது. தர்தீல் முறைப்படி திருக்குர்ஆனை பிறருக்கு கற்றுக் கொடுப்பதில் மிகுந்த ஆர்வம் இவர்களுக்கு இருந்தது. இவர்கள் வஸிய்யத் செய்துள்ளார்கள். இவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் இருக்கின்றார்கள்.

இரண்டாவது ஜனாஸா இங்குள்ள ஜமாஅத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய சய்யிது ரஃபீக் அஹ்மது ஸஃபீர் சாஹிபுடையதாகும். இவர்கள் சர்பட்டன் ஜமாஅத்தின் தலைவர் ஆவார்கள். **28** பிப்ரவரி **2017** ல் தமது **61** வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்களது தந்தையாரான டாக்டர் ஸஃபீருத்தீன் சாஹிப் குமாஸி அவர்கள் கானாவிலுள்ள அஹ்மதிய்யா மேல்நிலைப்பள்ளியின் முதல் பிரின்ஸிபலாக இருந்தார்கள். சய்யிது ரஃபீக் அஹ்மது ஸஃபீர் சாஹிபின் பிறப்பு லண்டனில் நிகழ்ந்தது. இவர்கள் ஜமாஅத் பணிகளில் மிக அதிகமாக ஈடுபட்டு வந்தார்கள். அத்ஃபால் செயலராகவும், குத்தாமுல் அஹ்மதிய்யாவில் காயித் ஆகவும், அன்ஸாருல்லாஹ் தலைமையக பொறுப்புகளான காயித் செஹத் வ ஜிஸ்மானி மற்றும் காயித் உமூமி ஆகவும் இவர்கள் தொண்டாற்றி உள்ளார்கள். வஃபாத்திற்கு முன்னதாக சர்பட்டன் ஜமாஅத்தின் தலைவராக இவர்கள் தொண்டாற்றிக் கொண்டு இருந்தார்கள். கிலாஃபத்துடன் இவர்களுக்கு ஆழமான அன்பும், தொடர்பும் இருந்து வந்தது. தொழுகையை பேணுபவராகவும், தஹஜ்ஜுத் தொழுபவராகவும், துஆக்கள் செய்பவராகவும், எளிமையான இயல்பை உடையவராகவும் இவர்கள் திகழ்ந்தார்கள். மிகவும் நல்ல மனிதராகவும், தூய உள்ளம் கொண்டவராகவும் திகழ்ந்தார்கள். மர்ஹூம் அவர்கள் வஸிய்யத் செய்திருந்தார்கள். தாயார், மனைவி ஆகியோருடன் இரண்டு மகன்களையும், இரண்டு மகள்களையும் தமது நினைவாக இவர்கள் விட்டுச் சென்றுள்ளார்கள்.

அவர்களது மனைவி இவ்வாறு எழுதுகின்றார்கள்: இவர்கள் மிகவும் மெதுவாக செயல்படக்கூடிய இயல்பை உடையவர்களாக இருந்தார்கள். குழந்தைகளுக்கு மிகவும் அன்புடனும், ஆர்வத்துடனும் தொழுகைகளின் பக்கம் கவனமூட்டி வந்தார்கள். அவர்களே ஜமாஅத்தான தொழுகையை தொழ வைப்பார்கள். திருமணம் செய்த நாளிலிருந்து தமது இறுதி நாள் வரை அவர்கள் ஜமாஅத் பணிகளில் ஈடுபட்டு வந்தார்கள். மக்களது பிரச்சனைகளை தீர்த்து வைப்பது மற்றும் பொருள் உதவி செய்வது இவர்களது வழக்கமாக இருந்து வந்தது. இவர்கள் மிகவும் நல்லவராகவும், சாதாரண இயல்பை உடையவராகவும் இருந்து வந்தார்கள்.

இவர்களது ஹல்காவில் தற்போது பொறுப்பு தலைவராக இருப்பவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: இவர்களது ஒரு நல்ல வழக்கமாக இது இருந்து வந்தது. அதாவது ஒவ்வொரு குத்பா தொடர்பாகவும் இஷா தொழுகைக்குப் பிறகு இவர்கள் குழந்தைகளிடம் அந்த குத்பாவில் என்ன கூறப்பட்டது? என்பதை கேள்வியாக கேட்பார்கள். சரியான பதில் கூறுபவருக்கு பரிசும் கொடுப்பார்கள். இதன் மூலம் குழந்தைகளுக்கு குத்பா கேட்பதற்கான ஆர்வம் ஏற்பட்டது.

நான் அறிவித்த இந்த இரண்டும் ஜனாஸா ஹாழிர் ஆகும். இது தவிர இருவருக்கு ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன்.

முதலாவது ஜனாஸா டாக்டர் மிர்ஸா லயீக் அஹ்மது சாஹிபுடையதாகும். இவர்கள் சாஹிப் ஸாதா மிர்ஸா ஹபீஸ் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனாவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் பேரன் ஆவார்கள். **28** பிப்ரவரி **2017** மதிய வேளையில் மாரடைப்பின் காரணமாக ரப்வாவிலுள்ள தாஹிர் ஹார்ட் இன்ஸ்டிடியூட்டில் தமது **68** –வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

இவர்களது தாயாரும் இப்போது உயிருடன் இருக்கின்றார்கள். அல்லாஹ் அவர்களுக்கும் இந்த துக்கத்தை சகித்துக் கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. இவர்கள் எஃப்.எஸ்.சி வரை ரப்வாவில் படித்த பிறகு முல்தானில் உள்ள மெடிக்கல் காலேஜில் எம்.பி.பி.எஸ் படித்து முடித்தார்கள். பிறகு ரப்வாவிலேயே பிராக்டிஸ் செய்து வந்தார்கள். இவர்கள் ஏழைகளுக்கு மிகவும் ஆதரவளித்து வந்தார்கள். பெரும்பாலான ஏழைகள் இவர்களைப் பற்றி எழுதியும் உள்ளார்கள். இவர்கள் எங்களுக்கு சிகிச்சை அளித்து கவனித்து வந்தார்கள் என்று அவர்கள் எழுதியுள்ளார்கள். எங்களுடன் மிகவும் அனுதாபத்துடன் நடந்து கொண்டார்கள் என்றும் எழுதியுள்ளார்கள். ஏழைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிப்பதற்காக வாரத்தில் ஒரு நாளை அர்ப்பணித்திருந்தார்கள். இதைத் தவிர ஜமாஅத் பணியில் இருப்பவர்களுக்கும், ஏழைகளுக்கும் இலவசமாக அவர்கள் சிகிச்சை அளித்து வந்தார்கள். இவர்களது முதல் திருமணம் செய்யது ஃபாயிஸா சாஹிபா அவர்களுடன் நடைபெற்றது. அவர்கள் மூலமாக இவர்களுக்கு இரண்டு மகன்கள் இருக்கின்றனர். இரண்டாவது திருமணம் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களது மகளான அமத்துஷ் ஷுகூர் சாஹிபா அவர்களுடன் நடைபெற்றது. அல்லாஹ் மர்ஹூமுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக. அவர்களது பாவங்களை மன்னிப்பானாக!

இரண்டாவது ஜனாஸா காயிப் மதிப்பிற்குரிய அமீனுல்லாஹ் கான் சாஹிபுடையதாகும். இவர்கள் U.S.A –வின் முன்னாள் பிரச்சாரகர் ஆவார்கள். இவர்கள் **28** பிப்ரவரி **2017** ல் செய்வாய்க்கிழமையன்று இரவில் அமெரிக்காவில் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் அவர்களுக்கு அமெரிக்கா, லைபீரிய்யா மற்றும் இங்கிலாந்தில் பிரச்சாரகராக பணி புரியும் நல்வாய்ப்பு கிடைத்தது. **1936** –ல் விரோவாலைச் சார்ந்த மதிப்பிற்குரிய அப்துல் மஜீத் கான் சாஹிப் அவர்களது வீட்டில் இவர்கள் பிறந்தார்கள். சிறு வயதிலேயே இவர்களது பெற்றோர்கள் இவர்களை வக்ஃப் செய்திருந்தார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறியதற்கிணங்க இவர்களது தந்தையார் தனது மகனை ஜமாஅத்திற்காக அர்ப்பணித்தார்கள். மர்ஹூம் அவர்களின் தாயார் இதனால் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அவர்களது கணவரான மியான் அப்துல் மஜீத் கான் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறியதற்கிணங்க தனது மகனை ஜமாஅத்திற்காக வக்ஃப் செய்தார்கள். அங்கிருந்து திரும்பி வந்த உடன் என்னிடம் அவர்கள் உனது மகனையும் நான் வக்ஃப் செய்து விட்டேன் என்று கூறினார்கள். ஏனென்றால் அவர்களது முதல் மனைவியின் மகனான டாக்டர் நஸீர் அஹ்மது கான் அவர்களை அவர்கள் வக்ஃப் செய்திருந்தார்கள். எனவே அவ்விஷயத்தில் எனக்கு எந்த முறையீடும் இருக்கக்கூடாது என்பதற்காக எனது மகனையும் அவர்கள் வக்ஃப் செய்து விட்டார்கள்.

**1945** –ல் நான்காவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது இவர்கள் சுயமே தன்னை வக்ஃப் செய்வதாக விண்ணப்பித்தார்கள். **1949** –ல்

*(தொடர்ச்சி முதல் பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad